

மகாத்மா காந்தி



ஆச்சார்ய வினோபா பாவே

இவர்களின் வழியில்...

# எனது வாழ்க்கைப் பாதைகள்...

– அ. உறுமத்தான்

வெளியீட்டோர் :

விழாக் குழுவினர், சிவகங்கை
94423 18810

விழாக் குழுவினர்

தலைவர்
பேராசிரியர் **நா. தர்மராஜன்**

துணைத் தலைவர்கள்
திரு. **சோ. இராமகிருஷ்ணன்** திரு. **V. தங்கமணி**

செயலாளர்கள்
திரு. **K. ஜவஹர்** திரு. **S. வினோபா**

பொருளாளர்
திரு. **இரா. மகேஸ்வரன்**

ஒருங்கிணைப்பாளர்கள்
திரு. **சஞ்சய் கணபதி** Ex. M.C., Dr. **உ. மோகன்தாஸ்**
திரு. **கை. கணபதி** திரு. **K.R. வைத்தியநாதன்,** செய்தியாளர்

உறுப்பினர்கள்
**M. பாலகிருஷ்ணன்,** வரலாற்று ஆசிரியர்
**N. முத்துசாமி** Ex. M.C.,
**S. கண்ணப்பன்,** தேசிய நல்லாசிரியர்
**G. மாரி** மருதுபாண்டியர் வரலாற்று நூலாசிரியர்
**C. சந்திரன்** Ex. ஒன்றிய சேர்மன், இடையமேலூர்
**S. சிவராமன்** E.B., Rtd.
**A. அனந்தராமன்** IOB., Rtd.
**R. சையது இப்ராஹிம்**
**M.S.P. சிவராமகிருஷ்ணன்** E.B., Rtd.
**R. வேல்ராஜ்,** திரைப்பட இயக்குநர்
**S. சீனிவாசன்,** செய்தியாளர்
கலைமகள் **N. முத்துகிருஷ்ணன்,** ஓவியர்
**P. கோவிந்தராஜன்** IOB., Rtd.
**இரா. பாண்டிவேல்** மனைராமன் ஹோட்டல்
**V. வெங்கட்ராமன்**
**S. கஸ்பார்**
**M. ஆப்ரஹாம்**
**K. பொன்னையா**
**S. கிருஷ்ணன்,** வழக்கறிஞர்

சஞ்சய் ஆப்செட், 59, கீழமாரட்வீதி, மதுரை -1 செல் : 90803 27001



சர்வோதயம் மற்றும்
கிராம வளர்ச்சியில் அரும்பணியாற்றியமைக்கு
சாதனையாளர் விருதுகள் பெற்றுள்ள
தமராக்கி வடக்கு, சர்வோதய இயக்கச் செம்மல்



திரு. **அ. உறுமத்தான்** அவர்களுக்கு

# பாராட்டு விழா



நாள் : **28-06-2018** வியாழக்கிழமை
நேரம் : மாலை **4.00** மணி
இடம் : **AMK மஹால்**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிர்புறம், சிவகங்கை

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை
திரு. **K. ஜவஹர்** அவர்கள்
செயலாளர், விழாக்குழு

தலைமை
பேராசிரியர் **நா. தர்மராஜன்** அவர்கள்
தலைவர், விழாக்குழு

பாராட்டு வழங்கி சிறப்புரை
தவத்திரு. குன்றக்குடி **பொன்னம்பல அடிகளார்** அவர்கள்
பத்மஸ்ரீ **கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** அவர்கள்
அகில இந்திய சர்வோதயத் தலைவர்

டாக்டர் **ந. மார்க்கண்டன்** அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், காந்திகிராம பல்கலைக் கழகம்

திரு. **K.M. நடராஜன்** அவர்கள்
தலைவர், தமிழ்நாடு சர்வோதய மண்டல்

டாக்டர் **மா.பா. குருசாமி** அவர்கள்
செயலாளர், காந்தி மியூசியம், மதுரை

திரு. **V. ராஜசேகரன்** Ex. M.L.A., அவர்கள்

திரு. **KR. முருகானந்தம்** Ex. M.L.A., அவர்கள்
தலைவர், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

திரு. **S. குணசேகரன்** Ex. M.L.A., அவர்கள்

சிறப்பு அழைப்பாளர்கள்

"இளைய மன்னர்" திரு. **R. மகேஷ் துரை** அவர்கள்

திரு. **R. வேங்கடகிருஷ்ணன்** அவர்கள்
தலைவர், கவியோகி சுத்தானந்த பாரதி மேல்நிலைப் பள்ளி

திரு. **சொ. பகீரத நாச்சியப்பன்** அவர்கள், நல்லாசிரியர்

திரு. **V.S. குமரகுரு** அவர்கள்
செயலாளர், மன்னர் கல்வி நிறுவனங்கள், சிவகங்கை

பேராசிரியர் **மா.பெ. சீனிவாசன்** அவர்கள்

பேராசிரியர் **சு. முத்துலக்குமி** அவர்கள்
முதல்வர், காந்திய சிந்தனைக் கல்லூரி, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை

திரு. **M. மோகனசுந்தரம்** அவர்கள், மூத்த வழக்கறிஞர்

திரு. **சி. இளங்கோவன்** அவர்கள், மூத்த வழக்கறிஞர்

திரு. **Dr. மு. பாலச்சந்திரன்** அவர்கள்
கூடுதல் இயக்குநர் - ஓய்வு, கால்நடை பராமரிப்புத் துறை

திரு. **M. மங்கேஸ்வரன்** அவர்கள், இணை இயக்குநர் - ஓய்வு, கூட்டுறவுத் துறை

திரு. **P. ராமச்சந்திரன்** அவர்கள், LIC - ஓய்வு

திரு. **A. முத்துக்கண்ணன்** அவர்கள், உரிமையாளர், சத்யா லாட்ஜ்

திரு. **S. அறிவுத்திலகம்** அவர்கள், தலைவர், வர்த்தகர் சங்கம்

திரு. **C. செல்வராஜ்** அவர்கள், தலைவர், காரைக்குடி சர்வோதய சங்கம்

திரு. **S. திருநாவுக்கரசு** அவர்கள்
தலைவர், காந்தி சேவா சங்கம், சிராவயல்

நன்றியுரை
திரு. **S. வினோபா** அவர்கள், செயலாளர், விழாக்குழு

சீர்மிகு இப்பாராட்டு விழாவில் தாங்கள் கலந்துகொண்டு
சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்
– விழாக் குழுவினர்

அச்சிட்டோர் : சஞ்சய் ஆப்செட், மதுரை. 90803 27001



குன்றக்குடி குருமகா சன்னிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களைச் சந்தித்து அருளாசி பெற்ற திரு. அ. உறுமத்தான் மற்றும் விழாக் குழுவினர்



# அணுக்கத் தொண்டர் அ.உறுமத்தான்

**– கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

**செயலாளர், லாஃப்டி**

*சிவகங்கையைப் பற்றி யோசிக்கும் போதெல்லாம் திரு.உறுமத்தான் அவர்கள், என் நினைவிற்கு வருவார். சர்வோதயத் தலைவர் ஜெகந்நாதன்ஜி அவர்களும், நானும் உழவனின் விழுதினைக்கு நிலம் என்ற லாஃப்டி நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார் என்பதால் மாத்திரம் அல்ல, பல அறப்போராட்டங்களிலும், ஆக்கப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்ட பெருமகனார் என்பதற்காக அவரைப் பற்றி நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு. அமரர் வித்யானந்த சரஸ்வதி அவர்களுடனும், சர்வோதயத் தலைவர் ச.ஜெகந்நாதன் அவர்களுடனும் அணுக்கத் தொண்டராக இருந்து பணியாற்றியவர். அவர்களிடம் அணுக்கத் தொண்டராக இருப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை அவருடன் பணியாற்றியவர்கள் அறிவார்கள். இவர் மீது அவர்கள் இருவருக்கும், தனிக் கவனமும், பாசமும் உண்டு.*

*ஆடு வளர்ப்போர் சங்கம் தமராக்கியில் ஆரம்பித்து, மாநிலத்திலேயே முதன்மையான சங்கம் என்ற பெயர் தேடியவர். பால் பண்ணை வைத்து, நலிந்த பிரிவினருக்கு மாடுகள் வாங்கிக் கொடுத்து, அவர்கள் நிலையை உயர்த்தியவர். சுய உதவிக் குழுக்கள் வைத்து மகளிர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டிருக்கிறார். இவருடைய சமூக சேவைக்காக நிவேதிதா அம்மையார் பெயரில் உருவாக்கப்பட்டிருக்கும் அறக்கட்டளையின் சார்பில் கொல்கத்தாவில் விருது வழங்குகின்ற விழா ஒன்று நடந்தது. மேற்கு வங்க ஆளுநர் முன்னிலையில் ராமகிருஷ்ண மடத்தின் தலைமை சன்யாசி அவர்கள் கரத்திலிருந்து நிவேதிதா நினைவு விருதை திரு.உறுமத்தான் பெற்றிருக்கிறார் என்றால், அது சாதாரண காரியம் அல்ல.*

*சென்னை, திருவல்லிக்கேணியில் மதுக்கடை மறியலில் திரு.ஜெகந்நாதன் அவர்கள் ஈடுபட்டிருந்த பொழுது, சிவகங்கையிலிருந்து பத்து, பதினைந்து சத்தியாகிரகிகளுடன் சென்னை வந்து அந்த மறியலில் ஈடுபட்டு சிறை சென்றார். மதுவிலக்கிற்காக சிவகங்கையில் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். சென்னை, மதுரை போன்ற இடங்களிலும் பேரணியில் கலந்திருக்கிறார். இப்படி அறப்போராட்டங்களுக்குப் பின்னால், குடிபோதைகளில் பாதிக்கப்பட்வர்களைத் திருத்தி அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் மையத்தை சிவகங்கையில் சிறப்பாக நடத்தி வருகிறார். நூற்றுக்கணக்கான பேர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு திரு.உறுமத்தான் அவர்கள் கருவியாக இருந்திருக்கிறார். இப்படி அவரது தொண்டுகள் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். அன்னாருக்கு நடைபெறுகின்ற இந்த சிறப்புப் பாராட்டு விழாவில் பங்கு கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.*

**– கிருஷ்ணம்மாள்**

# கிராமப்புற மக்களின் வழிகாட்டி...



**– க.மு.நடராஜன்**

**தலைவர், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,**

**காந்தி மியூசியம், மதுரை.**

அன்பார்ந்த சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். 'எனது வாழ்க்கைப் பாதைகள்' என்ற தங்களது வாழ்நாள் சர்வோதயப் பணி பற்றிய வரைவு கிடைத்தது. அதை முழுவதும் படித்து பார்த்தேன். ஒரு கிராமத்தில் இருந்து கொண்டு இவ்வளவு பணிகள் ஒருவரால் செய்ய முடிந்திருக்கிறது என்பதைப் பார்த்துப் பரவசமடைந்தேன். தங்களுடைய பணிகளைப் பற்றி ஏற்கெனவே எனக்குத் தெரிந்திருந்தாலும், பணிகள் அனைத்தையும் குறிப்பிட்டு ஒரு நூலாக அது வெளி வரும்பொழுது கிராமப்புற இளைஞர்களுக்கு அது சிறந்த முன்மாதிரியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

கால்நடை வளர்ப்பில் தங்களுக்கு இருந்த ஈடுபாடும், அனுபவமும்தான் தங்களுடைய மூத்த மகனை கால்நடை மருத்துவப் பயிற்சிக்கு அனுப்புவதற்கு காரணமாக இருந்திருக்கிறது என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு பின்னணி இருக்கிறதல்லவா? இந்தப் புத்தகத்தின் பின்பகுதியில் தாங்கள், தங்களுடைய மனைவி, தங்களுடைய குமாரர்கள், அவர்களுடைய துணைவியர் என அத்தனை பேரும் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்து இந்த நூலில் வெளியிட்டால் பொருத்தமாக இருக்கும். ஆவண செய்ய வேண்டுகிறேன்.

உங்கள் சர்வோதயப் பணிகள் தொடர்ந்து மிளிர எனது வாழ்த்துக்கள்.

**– க.மு.நடராஜன்**



# முன்மாதிரியான சர்வோதய ஊழியர்

– முனைவர் ந.மார்க்கண்டன்

முன்னாள் துணைவேந்தர்

காந்திகிராம நிகர்நிலைப் பல்கலைகழகம், காந்திகிராமம்

திரு.உறுமத்தான் அவர்கள் மிகச்சிறந்த காந்திய செயல்பாட்டாளர். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர்-கிராமத் தொழிலாளர்களின் வளர்ச்சி, இயற்கை வேளாண்மையை செயல்படுத்தல், மக்கள் கூட்டறவு மையங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தல், மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்துச் செயல்படுத்தல் போன்ற ஆக்கப் பணிகளில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து செயல்பட்டு வருபவர். இன்றும் 25 உழவர் மன்றங்கள் அவரது முயற்சியால் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

திரு. உறுமத்தான் அவர்களைப் போன்று சேவை செய்து கொண்டிருப்பவர்கள், சமுதாய நலனில் நாட்டமுள்ளவர்கள், தங்கள் தனி வாழ்க்கையை மற்றவர்களுக்கு முன் மாதிரியாக பிரதிபலிப்பவர்கள் ஊராட்சி அமைப்புக்களுக்கும், சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவற்றிற்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு வகை செய்யும் முறையில் தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். மக்களிடையே இதற்கான காந்திய அறவழி இயக்கங்கள் ஆங்காங்கு தோன்ற வேண்டும். அப்போதுதான் இன்றைய மோசமான அரசியல் - சமூக - பொருளாதார சூழ்நிலை மாறும். இது காலத்தின் கட்டாயம் என்பதை நாம் உணர வேண்டும். இன்றைய தலைமுறைக்கு திரு. உறுமத்தான் அவர்களின் வாழ்க்கை தலைசிறந்த எடுத்துக்காட்டான வாழ்க்கையாகும்.

திரு. உறுமத்தான் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் யாத்திரை செய்து அவர் செயல்படுத்திய, செயல்படுத்திக்கொண்டிருக்கும் சமுதாய ஆக்கப் பணிகளை எடுத்துக் கூறவேண்டும். இன்றைய தலைமுறையைச் சேர்ந்த தியாக உணர்வு மிக்க சமுதாயத் தொண்டர்களும், தலைவர்களும் உருவாக உதவ வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறை அருள் துணை நிற்கும் என்று கூறி அவருக்கு என் இதயம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ந.மார்க்கண்டன்

# ஊருக்கு உழைப்பதில் உயர்ந்து நிற்கும் திருமிகு அ. உறுமத்தான்



– முனைவர் மா.பா.குருசாமி

செயலாளர், காந்தி அருங்காட்சியகம், மதுரை

சிலர் செய்கின்ற தன்னலமற்ற சீர்மிகு சிறப்புப் பணிகள் அவர்களுக்கு நீண்ட புகழையும் நிலையான போற்றுதலையும் தேடித்தரும். அவர்கள் எங்கோ ஒரு மூலையில் எதையும் எதிர்பார்க்காமல் சுதர்மமாகத் தங்களது பணிகளைச் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களை உலகம் கண்டு கொள்ளும், போற்றும், பாராட்டும்,

அப்படிப்பட்ட அருமையான வாழ்நாள் சர்வோதயப் பணியாளர், சிறந்த நிர்வாகி போற்றுதலுக்குரிய திருமிகு அ. உறுமத்தான். தான் செய்யும் பணிகளின் மூலம் ஒருவர் தனது மேன்மையான ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு அவர் ஓர் இலக்கிய எடுத்துக்காட்டு.

## அனுபவப் பகிர்வு

அவர் காந்தியப் பணியை வாழ்க்கைப் பணியாக ஏற்று, பெற்ற பட்டறிவினை, மற்றவர்களும் அறிந்து பயன்பெறும் வகையில் ஒரு சிறந்த கையேடாக உருவாக்கி வழங்கியிருக்கின்றார். போற்றத்தக்க படைப்பு.

திருமிகு அ.உறுமத்தான் அவர்களை ஓரளவு அறிவேன். இந்த நூலைப் படித்த பொழுதுதான் அவரைப்பற்றி நான் அறிந்திருப்பது மிகக் குறைவு என்பது தெரிந்தது. காந்தியப் பணிகளில் புடம் போடப்பட்டிருக்கின்றார். மேற்கொண்ட பணிகளினால் ஒளிர்கின்றார்.

பெற்றது பள்ளிக் கல்விதான் என்றாலும் அவருக்கு ஓர் அருமையான வழிகாட்டியாக அவரது பெரியப்பா திருமிகு பெரியகருப்பன் அம்பலம் திகழ்ந்திருக்கின்றார். அவர் ஊராட்சி மன்றத் தலைவராகத் தொண்டு செய்தவர். அண்ணல் காந்தியடிகளைப் பின்பற்றிச் சென்றவர். அவர் காட்டிய வழியில் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டது திரு. உறுமத்தான் சாதனை.

**பணியே பயிற்சி**

ஒருவர் உள்ளம் ஒன்றி ஒரு பணியைச் செய்கின்ற பொழுது, அது திறன் வளர்ச்சியாக உருவெடுக்கின்றது. செயல்வழி பெறும் அறிவாற்றல், புதுப்புது பணிகளை மேற்கொள்ள தனித்துவமான திறனை வழங்கும், தலைமை ஏற்கும் தகுதியை வளர்க்கும். இதனை திரு. உறுமத்தான் வாழ்க்கை வெளிக் காட்டுகிறது.

இளைஞர் மன்றம் உருவான பொழுது அதன் தலைமைப் பொறுப்பேற்ற திரு. உறுமத்தான் இளைஞர் மன்றத்தின் பணிகள் வேளாண்மையில் தொடங்கி, மருத்துவத்தில் காலூன்றி, நாட்டுப்பற்றாக சமுதாயத் தொண்டாக வடிவம் பெற்று, அரிஜன சேவையில் பறந்து, பல்துறைப்பணிகளாக வளர்ந்தது நம்மை வியக்க வைக்கிறது.

கிராமங்களின் உயிர்மூச்சு வேளாண்மை. அதன் இரத்த ஓட்டம் கால்நடை. கிராம மக்களின் வாழ்க்கையில் வளம் சேர்க்க இரண்டும் வேண்டும். திரு. உறுமத்தான் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சாதனை நிகழ்த்தியிருக்கின்றார். ஆடு வளர்ப்புப் பற்றி வழிகாட்டும் நூல் எழுதும் அளவிற்கு பட்டறிவைப் பெற்றிருக்கின்றார். பரிசும் பாராட்டும் அவரைத் தேடி வந்திருக்கின்றன.

நிர்மாணப் பணி செய்பவர்கள் அதில் எப்படித் தோய்ந்து போக வேண்டும் என்பதற்கு அவரது செயல்பாடுகள் தக்க எடுத்துக்காட்டுகள். செய்யும் பணியின் மூலம் கற்கும் கல்விதான் வாழ்க்கைக் கல்வியாக இருக்கும் என்பதை அவரது பணிகளின் மூலம் அறிகின்றோம்.

**சர்வோதய இயக்கச் சாதனை**

இவர் காந்தியத்தை வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டவர். பள்ளிப் பருவத்தில் நான் ராட்டையில் நூல் நூற்று அதனை ஒரு சிட்டத்திற்கு நான்கு அணாவென விற்பேன். இதை நான் சர்வோதயத்தில் சேர்ந்த பிறகும் செய்து வந்தேன். எங்கள் கிராமத்தில் இருந்த வயதான மூதாட்டியிடம் கைராட்டையில் நூல் நூற்கும் நுட்பத்தைக் கற்றுக் கொண்டு நாளொன்றுக்கு 0.75 பைசா சம்பாதித்தேன் என்று குறிப்பிடுகின்றார். பின்னாளில் ஆயுள் காப்பீட்டுக் கழக முகவராகவும், பகுதிநேரப் பணியாற்றி தனக்கு வேண்டிய வருவாயைத் தேடியிருக்கின்றார். இந்தத் தற்சார்பும் எளிமையும்தான் அவர் உயரப் படிக்கற்களாகியிருக்கின்றன.

சர்வோதயத் தலைவர்கள் திருமிகு ஜெகந்நாதன், திருமதி. கிருஷ்ணம்மாள்; திருமிகு பூபதி, திருமிகு வீ. செல்வராஜ். திருமிகு க.மு.நடராஜன் ஆகியோரிடமும் குன்றக்குடி அடிகளார் போன்றவர்களிடமும் அவருக்கு நெருங்கிய தொடர்பு கிடைத்திருக்கின்றது. இது அவரது வளர்ச்சிக்கு அமைந்த உரம், வாய்ப்பு.

அவர் மதுவிலக்குப் போராட்டத்தில் ஈடுபட்டது, சிறை சென்றது, அவரைப் புடம் போட்டிருக்கின்றது. பசுப் பாதுகாப்பிற்கும் தனது ஆக்கப்பூர்வமான பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார்.

அவரது நீண்ட நெடிய ஆக்கப்பணிகளில் செய்தவற்றை எல்லாம் சுட்டிக்காட்டுகின்றார். பார்த்த பண்ணைகளையும் பயின்றவற்றையும் அவர் கூறுகின்றது நாமே நேரில் சென்று பார்ப்பதைப் போலிருக்கின்றது. போய்ப் பார்க்க நம்மைத் தூண்டுகிறது.

**மணிமகுடப் பணி**

அவர் செய்த, செய்கின்ற பணிகளில் மணிமகுடமாகத் திகழ்வது குடிபோதை மாற்றுச் சிகிச்சை மையம் நடத்துவது.

இன்று நாட்டை விடாது பிடித்துக் கொண்டிருக்கும் அரக்கன்-சனியன் - மது. அண்ணல் காந்தியடிகள் நாடு விடுதலை பெற்ற பொழுது மிகப் பெரிய போராட்டம் நடத்தி குடிமக்கள் வாழ குடியை ஒழித்தார். ஆனால் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் வருவாய் கருதி மதுக்கடைகளைத் திறந்தனர். தமிழகத்தில் அரசே நடத்துகின்ற இழிநிலை.

மதுவினால் நமது சமுதாய வாழ்க்கை சீர்குலைந்திருக்கின்றது. பல குடும்பங்கள் தன்னிலை இழந்து தடுமாறுகின்றன. இந்நிலையில காந்தியவாதிகள் மதுவிலக்குப் போராட்டம் நடத்தினர்.

குடிபோதைக்கு ஆளானவர்களை மறுபடியம் மனிதர்களாக ஆக்குவதற்கு குடிபோதை மாற்றுச் சிகிச்சை மையத்தை மிகுந்த அர்ப்பணிப்போடு நடத்தி வருகின்றார். எண்ணற்றவர்களுக்கு மறுவாழ்வு அளித்திருப்பது பாராட்டுக்குரிய பணி.

அந்த மையத்தை நேரில் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அங்கு டாக்டர் ஆர்.கதிர்மணி என்ற தொண்டுள்ளம் கொண்ட மருத்துவரின் அரிய பணி. திரு. உறுமத்தான் குடும்பத்தோடு இந்த சமுதாய நலப்பணியில் ஈடுபட்டிருப்பது நம்மை வியக்க வைக்கின்றது.

**தனிவாழ்க்கை**

திருமிகு அ. உறுமத்தான் இந்த நூலை அவர் மேற்கொண்ட பணிகளின் தொகுப்பாக எழுதியிருக்கின்றார். அவர் நடந்து வந்த வாழ்க்கைப் பாதையைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

அவர் விரிவாக தனது வாழ்க்கை வரலாற்றை எழுதலாம். அவரது பெற்றோர் பற்றிய சிறப்புக்களைக் கூறலாம். அவரது பெரியப்பா போன்ற ஊராட்சித் தலைவர்கள் காலத் தேவை.

அவரது குடும்ப வாழ்க்கை பற்றியும் தனது மனைவியையும் பிள்ளைகளையும் எப்படி ஆக்கப்பணிகளில் இணையச் செய்தார் என்பதைக் கூறலாம்.

அவருக்கு பல சர்வோதயத் தலைவர்களோடு நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட அரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தலைவர்களைப் பற்றி அவர் அறிந்ததை எழுதலாம்.

அவர் ஒவ்வொரு துறையிலும் பெற்றிருக்கின்ற பட்டறிவு எந்த நூலிலும் கிடைக்காது. அவற்றை அவர் இந்தக் கையேட்டில் ஓரளவு பதிவு செய்துள்ளார். அவற்றை விரிவாக எழுதலாம்.

**ஊருக்கு ஒருவர்**

திருமிகு அ. உறுமத்தான் நடந்து வந்த வாழ்க்கைப் பாதையைப் படிக்கின்ற பொழுது இப்படி ஊருக்கு ஓர் உறுமத்தான் இருந்தால் காந்தியம் எப்படியும் தழைத்து வளரும் என்ற ஏக்கம் தோன்றுகின்றது.

இன்று நமக்கு இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்ற, வழிநடத்துகின்ற தொண்டர்கள் தேவை. இன்றயை பணத்தின் பின்னால் ஓடும் வாணிப உலகிலும் திரு. உறுமத்தான் போன்ற ஊருக்கு உழைப்பவர் சிலர் ஆங்காங்கு இருப்பதுதான் நமக்கு, நமது தாய்த்திரு நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறதென்ற நம்பிக்கையைத் தருகின்றது.

காந்திய வழியில் தொடர்ந்து தொண்டு செய்யும் திரு. அ. உறுமத்தானைப் போற்றுவோம். அவர் பணி சிறக்க வாழ்த்துவோம்.

**– மா.பா.குருசாமி**

# வாழ்த்துகின்றோம்

இளம்வயது முதல் இன்று வரை சர்வோதயப் பணியிலும் கிராம வளர்ச்சிப் பணியிலும் அரும்பணியாற்றியமைக்கு பல விருதுகள் பெற்றுள்ள தங்களுக்குப் பாராட்டு விழா நடைபெறுவது அறிந்து தமிழ்நாடு காந்தி நினைவு நிதியும், அதன் ஊழியர்களும் பெருமை கொள்கிறோம்.

தாங்கள் இன்னும் பல கிராமங்களைத் தத்தெடுத்து சர்வோதயப் பணியில் தொடர்ந்து ஈடுபட கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

**– ஆர். சுப்பிரமணியன்**
**செயலாளர்**
**தமிழ்நாடு காந்தி நினைவு நிதி**

# விளம்பரமில்லா சேவை தொடரட்டும்...



– பேராசிரியர் **நா.தர்மராஜன்**

**எழுத்தாளர், சிவகங்கை**

*சிவகங்கைக்கு அருகிலுள்ள தமராக்கி என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்த அ.உறுமத்தான் இளமையிலிருந்து மக்கள் சேவையில் ஈடுபட்டார். அவருடைய துணைவியாரும் கிராமங்களில் சுயநிதிக் குழுவின் பணிகளில் நேர்மையாகப் பணியாற்றியதால் ஒன்றியக் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. உறுமத்தானுக்கு நான்கு புத்திரர்கள். அவர்களில் திரு.உ.மோகன்தாஸ் கால்நடை மருத்துவராக உள்ளார்.*

*சர்வோதய மற்றும் கிராம ராஜ்ய நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு மக்களாலும் அரசாங்க அதிகாரிகளாலும் பாராட்டப்பட்டிருக்கிறார். உழுபவருக்கு நிலம் (LAFTI) என்னும் இயக்கத்தைத் துவக்கிய சர்வோதயத் தலைவர் ச.ஜெகந்நாதன் மற்றும் திருமதி கிருஷ்ணம்மாள் ஆகியோர் அவரைப் பாராட்டியவர்களில் முக்கியமானவர்கள். இப்பொழுது லாஃப்டி இயக்கத்தின் தலைவராக உறுமத்தான் இருக்கிறார். சிவகங்கை நகரத்திலுள்ள படித்தவர்கள் அவரை மதிக்கிறார்கள். டாக்டர் ந.மார்க்கண்டன், திரு.க.மு.நடராஜன், டாக்டர் மா.பா.குருசாமி ஆகியோர் பாராட்டு விழாவில் கலந்து கொள்வது இதற்குச் சான்றாகும்.*

*அ.உறுமத்தான் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன். அவருடைய விளம்பரமில்லாத சேவை தொடர வேண்டும்; விவசாயப் பெருங்குடியினர் மேன்மையுற வேண்டும்; அவருடைய குடும்பம் மென்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சிவகங்கை நகரத்தின் மூத்த குடிமகன் என்ற முறையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.*

**– நா.தர்மராஜன்**



# இதயமுடன் வாழ்த்திடுவோம்

- முனைவர் **மா.பாதமுத்து**
ச.மேலப்பட்டி

நெற்றித் திலகமிட்டு
நிறைமுகத்தில் நீறிட்டு
பற்றிப் படர்ந்த
பகலவனின் ஒளிபரப்பி
கற்றைக் குளிர் சுடரை
கருணையுடன் பொழிகின்ற
ஒற்றைநிலா வண்ணத்தான்
உறுமத்தான் பெருவளத்தான்!

அன்னவரின் பணி முற்றும்
ஆற்றியுள்ள திறன்புரிந்து
கன்னல் மொழிப் புகழாரம்
கடமைபல சுமந்த வண்ணம்
இன்னல்பல எதுவரினும்
ஏற்றதனை எதிர்கொண்டே
நன்மைபல நாட்டவர்க்கே
நல்கியவர் உறுமத்தான்!

கூட்டுறவால் நாடுயரும்
கொள்கைதனைக் கரம் கோர்த்தே
நாட்டிலுள்ள நலிந்தோர்க்கு
நண்பனுமாய் ஆசானாய்
மீட்டெடுத்தே துன்புறுவோர்
மேம்படவே பணிபுரிந்த
தேட்டாளன் உறுமத்தான்
தெள்ளுதமிழ் உள்ளத்தான்!

கடைக்கோடி மனிதனுக்கும்
கைகொடுத்துக் காப்பதற்கு
மடைதிறந்த அண்ணல் வழி
மகிழ்வோடே பின்பற்றி
நடைநடையாய் நடந்தெங்கும்
நலிவுதனை விரட்டுகின்ற
படைபலத்தான் தோழமையான்
பண்பாளன் உறுமத்தான்!

அன்புதவழ் வாழ்நாளில்
அயர்ந்திட்ட வளம் முற்றும்
பொன்னொளிரும் தண்மதியாய்
பெற்றதனைப் பிறருக்காய்
பன்மடங்காய் பகிர்ந்தளிக்கும்
பாங்காளன் அறவாணன்
என்றென்றும் பொன்றாத
இதயமுடன் வாழ்த்திடுவோம்!

**- மா.பாதமுத்து**

# தமராக்கி தந்த சர்வோதய நிர்மாணச் செயல் மனிதர்



– முனைவர் **முத்துஇலக்குமி**

**முதல்வர், காந்திய சிந்தனைக் கல்லூரி, மதுரை**

*காந்தியத் தத்துவத்தை. பணிகளை அவரவர் உள்ளக் கருத்திற்கு ஏற்ப உணர்ந்து உயிர்ப்பித்து செயல் வடிவம் கொடுத்தல் என்பது 'காந்தியுகம்' தொட்டு இன்று வரை மட்டுமல்ல, இனியும் தொட்டுத் தொடரும் பாரம்பரியப் பதிவாகும்.*

*இதில் சிவகங்கை மாவட்டம் தமராக்கி தந்த நிர்மாணப் பணியாளர், செயல் மனிதர், வேகமும் விவேகமும் உடைய உறுமத்தான் அண்ணாச்சி ஆவார்.*

*காந்தியப் பணி தொடர்பான நிகழ்வுகளில் அவரைச் சந்திப்பதுண்டு. அவர்அவருக்கே உரிய பாணியில் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சொல்ல வருவதை எவ்விதத் தயக்கமுமின்றி சொல்லும் திறன்மிக்கவர். பல்வேறு அனுபவ நிகழ்வுகளையும் எடுத்துக்கூறுவார்.*

*சர்வோதயப் பணியிலுள்ள பல்வேறு கூறுகளில் அவர்கள் பகுதிக்கு ஏற்ற பணிகளை, மக்கட் சேவைப் பணிகளை, ஆடு, கோழி, மாடு வளர்ப்பு, உழவு எனப் பல்வேறு களங்களில் மக்களை ஆற்றுப்படுத்தியுள்ளார். மக்களின் தேவையினை உணர்ந்து உதவுதல் உயரிய பண்பு. அப்பண்பு நிறைந்த இவர் பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.*

*விருதுகளால் ஏற்றம் இவருக்கு என்பதாலும் இவரால் அவ்விருதுகளுக்குத் தனிச் சிறப்புக் கிடைத்தது எனலாம். 'உறுமத்தான்' என்று பெற்றோர் இட்ட பெயர், இவரது உரத்த குரல் ஓசையால் என்று குறிப்பிடலாம். 'தமராக்கி' என்ற ஊரில் பிறந்தமையால் இவரால் இன்று இவ்வூர் கூடுதல் சிறப்பினைப் பெற்று வருகின்றது என்றும் கூறுதற்கு இயலும்! 'தமராக்கி' என்ற ஊர்ப் பெயர் ஆய்வு தேவை என்று எண்ணும் அளவு தனித்துவமாக உள்ளது.*

*பாராட்டு விழா காணும் உறுமத்தான் அண்ணாச்சியின் உன்னத சர்வோதயப் பணிகள் நாளும் தொடர்ந்திட உடல் வளமும் நலமும் செல்வமும் நட்பும் உறவும் என்றென்றும் நிலைத்திட வாழ்த்தி வணங்குகிறேன்!*

*வாழ்க வளமுடன்! வளர்க காந்தியத்துடன்!! தொடர்க சர்வோதயப் பணிகள்!!!*

**– முத்துஇலக்குமி**



# சர்வோதய சமுதாயம்

– மு.சீ. தேவதாஸ் காந்தி
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை

“கருத்துக்களைப் புரிந்து கொண்டு ஏற்றபின் மனிதருக்குள் ஏற்படும் மாற்றமே புரட்சியாகும்”, “சர்வோதய சமுதாயம் மக்களை அண்டியதாக இருக்க வேண்டும்” போன்ற வினோபா அடிகளின் ஆழமான சிந்தனைகளை கவனத்தில் வைத்துக் கொண்டால் அது செயல்பாட்டிற்கு வருவதற்கு இறைவனருள் துணைபுரியும். நற்சிந்தனைகள் நம் கவனத்தில் இருக்க வேண்டும்.

சம்பிரதாயமான கட்டுப்பாடு காரணமாக மக்கள் ஓரிடத்திற்கு வந்தால் அவர்களுக்கு நலனைச் செய்யும் சக்தி பெருகுவதில்லை. அவர்கள் இயல்பான உறவுக்கான உணர்வோடு ஒன்று கூடும்போதும், ஸ்தூலமான தொடர்புகளை குறைந்தவையாகக் கருதும் போதும், அபிப்பிராயங்களை விட மனிதனுக்கு அதிக மகத்துவம் தரும்போதும், புறக் கர்மங்களைவிட அகத் தூய்மைக்கு அதிக மகத்துவம் தரும்போதும், மனிதனை மனித உறவில் அறிந்து கொள்ளும் போதும் நன்மை செய்வதற்கான சக்தி பெருகுகிறது.

சர்வோதய சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும் ஒரு சர்வாதிகாரியான தொண்டர். உயர்திரு உறுமத்தான் அண்ணாச்சி அவர்கள் மிகச் சிறந்த சமுதாயத் தொண்டராக எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறார். சர்வாதிகாரம், தொண்டு இரண்டும் சேரும் இடத்தில் தானாகவே எல்லாக் குறைகளும் நிர்வர்த்தியாகி நற்குணங்கள் நிலைபெறும்.

வாழ்க வையகம்.

– மு.சீ. தேவதாஸ் காந்தி

# உறுமத்தான் அவர்களின் அரும்பணிகள் தொடரட்டும்



**– K. ஜவஹர்**

**மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர் (பணி நிறைவு)**

**நேரு யுவ கேந்திரா, மதுரை**

*1985ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் முதல் முறையாக அசேபா கல்வி நிறுவனங்கள் தமராக்கியில் துவக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரு.பாப்பாதுரை அவர்களுடன் கலந்து கொண்டேன். அசேபா கல்வி நிறுவனம் துவக்கக் காரணமான திரு.அ.உறுமத்தான் அவர்கள் பேசும் பொழுது,"இந்த கிராமத்திற்கு யார் வந்தாலும் தமதாக்கிக் கொள்வது தான் தமராக்கி" என்றார். அது முற்றிலும் உண்மை.*

*அதைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டில் திரு.உறுமத்தான் அவர்களால் துவக்கப்பட்ட ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்வதற்கான வாய்ப்பும் எனக்கும் கிடைத்தது.*

*"செயற்கரிய காரியங்களைச் செய்யக் கூடியவர்களே பெரியோர்கள் என மதிக்கப்படுவர்". சர்வோதயம் மூலம் சிலர் உலகறிய விஷ்வரூபம் எடுத்தார்கள்; பலர் நாடு தழுவிய புகழ் பெற்றார்கள்; மிகப் பலர் பொதுத் தொண்டில் சிறப்பாக ஈடுபட்டும், அனைவரும் அறியும் வகையில் இல்லாமல் உள்ளனர். திரு. அ. உறுமத்தான் அவர்கள் சர்வோதய வழியில் கிராம வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகள் ஏராளம். அதனால் திரு.அ.உறுமத்தான் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்துவது சாலப்பொருத்தம்.*

*திரு.அ.உறுமத்தான் அவர்களின் பணி தொடர அவருடன் பயணிப்பதில் பெருமை கொள்கிறோம்.*

**– K. ஜவஹர்**



# முன்னோடி சமூக ஆர்வலர் அ.உறுமத்தான்

**– சஞ்சய் கணபதி** Ex. MC

**முன்னாள் தலைவர், சிவகங்கை நகர் காங்கிரஸ்**

சிவகங்கை ஒன்றியம் தமராக்கி வடக்கு கிராமத்தில் பெருமைக்குரிய குடும்பத்தில் பிறந்து, ஊராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றிய திரு. பெரியகருப்பன் அம்பலம் அவர்களின் சகோதரர் திரு. அழகர்சாமி அம்பலம் அவர்களின் புதல்வர் திரு. அ.உறுமத்தான் அம்பலம் அவர்கள். கிராமத்தின் அம்பலகாரர் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தாலும் காந்திய, சர்வோதய, கிராமதான, தொண்டு நிறுவன, அரசியல், சமுதாய மேம்பாடு போன்ற பணிகளைச் செய்து ‘சர்வோதயச் செம்மல்’ என்றப் பட்டத்தை பெற்றுவிட்ட அவர், ‘வாழ்நாள் சர்வோதயப் பணியாளர்’ என்று அழைப்பதையே பெருமையாகக் கருதுகிறார். தன்னடக்கத்திற்கு உரிய மனிதர், இன்முகத்துக்குச் சொந்தக்காரர் என்ற பெருமைக்கு தன்னை தகுதிமிக்கவராக ஆக்கிக்கொண்டு, மக்கள் பணியாற்றி வருகிறார்.

தேனீயைப் போன்ற சுறுசுறுப்பு, எடுத்த காரியத்தில் விடாமுயற்சி, பணிகளை ஒருங்கிணைக்கும் திறமை, புரிதல், நிர்வாக ஆளுமை, சவாலான காரியங்களையும் சோர்வின்றி சாதுர்யமாக முடித்துக் காட்டுவது, படித்தவர்கள், ஆட்சியாளர்கள், பண்பாளர்கள், வல்லுநர்களுடன் அன்பும் நட்பும் பாராட்டுவது, இவரது வெற்றியின் ரகசியமாகும். பாமரர்கள், ஏழைகள், பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் எனப் பாகுபாடு பாராமல் அவர்களின் மேம்பாட்டுக்கு தனது உழைப்பை, அறிவை, பொருளைத் தந்து உதவிடும் தன்மை இவரது மனித நேயத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

பாரம்பரியக் குடும்ப வேளாண்மைப் பணிகளிலும் தனது அறிவாற்றலால் தேர்ந்தெடுத்த பணிகளிலும், உச்சநிலை ஆயுள் காப்பீட்டு முகவராகப் பணியாற்றிய நிலையிலும், இன்னும் பல்வேறு உழைப்பிலும் தன்னிறைவு கொண்டவராக விளங்குகிறார். தன் பணிகளைச் சரியாகச் செய்யும் ஒருவரே இச்சமுதாயத்திற்கு பணியாற்றும் வல்லமை பெற்றவராக விளங்க முடியும் என்பதற்கு இவர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

இவரது துணைவியார் திருமதி போதும்பொண்ணு அவர்கள் இவரது பணிகளுக்கு உறுதுணையாக இருந்து புகழ் சேர்ப்பவர். குடும்பத்தை நன்கு கவனித்துக்

கொள்வதுடன், பொதுப்பணிகளிலும் பெரும் ஆர்வம் காட்டி வருபவர். தமராக்கிப் பகுதி ஒன்றியக் கவுன்சிலராகத் தேர்வு செய்யப்பட்டு பல நற்பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தி வருபவர்.

தன் குடும்பத்தைக் குறைவின்றி உயரச் செய்து, பெற்ற பிள்ளைகளை கல்வி கற்கச் செய்து, எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய கடமைகளை ஒரு தந்தையாக சிறப்பாகச் செய்து முடித்துள்ளார். *Dr.* உ.மோகன்தாஸ் *M.V.Sc.,* உ. பெரியகருப்பன், உ. பிரபு *M.A.,* உ. மகாலிங்கம் *M.S.W., M.Sc.,* உ.வள்ளிக்கொடி ஆகிய நன்மக்கள் இவரால் சிறப்பாக வளர்க்கப்பட்டுள்ளனர். அவர்களும், அவர்தம் துணையினரும் திரு. அ.உறுமத்தான் அவர்களின் சமுதாயப் பணிகளுக்கு பக்கபலமாக நிற்கிறார்கள் என்பது இங்கே மிகுந்த பெருமையோடு குறிப்பிடத்தக்கதாகும்.

சிவகங்கை மாவட்டம் முழுவதும் தொண்டு நிறுவனம் மூலம் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அமைத்து அவர்களுக்கு வங்கிக் கடன் உதவி, அரசுத் திட்டங்கள் மூலம் பணிகள், தொழில் பயிற்சி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்கள், ஏன் குழந்தைகளுக்கும் உணவு, அறிவு அளிக்கும் திட்டங்கள், குடிபோதையில் சிக்கித் தவிப்பவர்களுக்கு மறுவாழ்வு மையம் என சமுதாய மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றி வரும் திரு. அ.உறுமத்தான் அவர்கள் இன்னும் பல பாராட்டுக்கள், பட்டங்கள், வாழ்த்துக்கள் பெறவேண்டும். இப்பகுதி சமூக ஆர்வலர்களுக்கு அவர் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்று எனது ஆவலைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன். வணக்கம் !

**– சஞ்சய் கணபதி**

**“நம்மை அறிமுகப்படுத்துவது நம் வார்த்தைகள் அல்ல**
**நமது வாழ்க்கையே”** **– காந்திஜி**



# தெய்வம் தந்த மனிதர்

**– எஸ்.வினோபா**

**கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் (ஓய்வு)**

**சிவகங்கை**

*சிவகங்கை மாவட்டத்தில் தமராக்கி என்ற ஓர் அழகிய சிற்றூர். அத்துடன் இணைந்த சுமார் 100க்கும் மேற்பட்ட கிராமங்கள். இறைவன் படைப்பில் எல்லோரும் நல்லவரே என்பதற்கேற்ப இக்கிராம மக்கள் வறுமையைத் தவிர வேறு ஒன்றை அறியாத காலம். இந்நாட்களில் இக்கிராமங்களின் நாட்டாண்மையாக வாழ்ந்து வந்த குடும்பம்தான் உறுமத்தானின் குடும்பம்.*

*ஆம்! நாம் அனைவரும் தாயின் கருவறையில் இருந்து வெளியே வரும்போது எதையும் கற்றுக்கொண்டு வெளிவருவதில்லை. எதையும் அறியாமல் பால்மனம் கொண்டே பிறக்கின்றோம். பிறந்த பின்னர்தான் அதன் சூழலில் கிடைக்கின்றவற்றைப் பார்த்தும், காதால் கேட்டும், உணர்ந்தும், கிரகித்தும் வளர்கின்றோம். அப்படி வளர்ந்தவர்களில் நமது உறுமத்தானும் ஒருவர். வளரும் போதே காந்திய, சர்வோதய, கிராமச் சிந்தனைகளில் வளர்ந்து அவற்றையே தம் வாழ்வின் நெறிமுறைகளாகக் கொண்டு தனக்கென ஒருவழியை வகுத்துக் கொண்டு அதற்கென உள்ள தலைவர்களைத் தேர்வு செய்து நட்பு பாராட்டி வந்தவர்.*

*யாரும் செல்வந்தர்களாகப் பிறப்பதில்லை. அதைப் போலவே யாரும் மிக எளிதாக செல்வந்தர்கள் ஆவதும் இயலாத ஒன்றே. அப்படியே செல்வந்தர்கள் ஆனாலும் அவர்கள் யாரும் பிறர் நலன் காக்கப் பாடுபடுவது இல்லை. ஆனால் அரசியலைப் பொருத்தவரை தலைவர்கள் இன்றைய நாளில் உருவாக்கப்படுகிறார்கள். ஆனால் மக்கள் தலைவர்கள் ஆயிரம் ஆண்டிற்கு ஒரு நபர் அவதாரம் செய்வர் என்பார்கள்.*

*தம் இளமைக் காலத்திலேயே வாழ்வில் தனது குடும்ப நிலை மற்றும் தம் மக்களின் நிலையைக் கண்டு தன்னுள் ஏற்பட்ட தீப்பொறியே இன்று ஒரு தேசப் பற்றாளனான உறுமத்தான் என்ற நபரைப் பெற வைத்துள்ளது.*

*வறுமையற்ற குடும்பத்தில் பிறந்தாலும் இவர் பிறரின் வறுமையைப்பற்றியே சிந்திக்கலானார். பிறரின் துயர் துடைத்து பேரானந்தம் காண நினைத்தார். ஆம் தாம்*

வாழும் கிராமத்தில் தன் குடும்பத்தாருக்கு உள்ள நற்பெயரை வைத்து இவர் அரசியல் ஆதிக்கம் செய்திட முற்படவில்லை. மாறாக தாம் சார்ந்துள்ள இந்த கிராமங்கள் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி அடைய வேண்டும்; அதற்கு தாம் செய்ய வேண்டிய பணி என்ன? என்று சிறுவயதிலேயே சிந்தித்த சீமான். அதனால்தான் இவர் தனது ஊனையும், உறக்கத்தையும் குறைத்து வெயிலில், மழையில். பனியில், இவைகளையெல்லாம் தாங்கி தவம் மேற்கொண்டார். ஆம் இவர் மேற்கொண்ட தவம்தான், தம் இல்லத்திற்கு வருபவர்களுக்கு எல்லாம் உணவளித்து விட்டதால் தம் பணி நிறைவு பெற்றது என்றில்லாமல், தாம் சார்ந்திட்ட கிராமங்களும் இன்றைய வளர்ச்சி பெற்ற நகர வாழ்வை அடைய வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையுடன், பிரதிபலன் எதையும் எதிர்பாராத தொண்டனாக இன்முகத்துடன் இடர்பல கடந்து, காந்தியம் என்ற காந்தி மந்திரத்தை மனதில் நிறுத்தி, கிராம நிர்மாண சங்கத்தைத் துவக்கி, இளைஞர்களை ஒருங்கிணைத்து, நம்மவர்களின் வாழ்வாதாரம் உயர நாம் செய்ய வேண்டிய அரும்பணிகள் என்ன? அவைகளை நாம் மேற்கொள்ளும் போது எதிர் கொள்ள வேண்டிய சவால்கள் என்ன? என்பதை நன்கு ஆய்ந்தார். முதற்கண் கல்விக்கு முக்கியத்துவம் தந்து கிராமத்தில் உள்ள அனைவரும் கல்வியறிவு பெற்றாக வேண்டும் என்ற வகையில் அன்றைய நாளிலேயே குழந்தைகள் பள்ளியை விட்டு இடைநில்லா நிலையை ஏற்படுத்தி ஆதாரக் கல்வியை ஊக்கப்படுத்தினார். ஒவ்வொரு வீட்டின் முன்னேற்றமே கிராமத்தின் முன்னேற்றம் என்ற வகையில் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபட்டு அவர்களை குழுக்களாக அமைத்து பல்வேறு பொதுத் துறை வங்கிகள், அரசு மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று வழங்கி, அவர்கள் முன்னேற்றம் காண பேருதவி செய்துள்ளார். மது என்ற அரக்கன் மனிதனை மடையனாக்கி விடுவான், குடும்பத்தை அழித்து விடுவான் என்பதை உணர்ந்த இவர் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தல், மது விற்பனைக் கூடங்களுக்குச் சென்று மறியல் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு தமிழகம் எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டார். சென்னை திருவல்லிக்கேணியில் மதுக்கடை முன் மறியல் செய்து சிறை சென்றுள்ளார்.

கூட்டுறவே - நாட்டுயர்வு என்பதற்கு ஏற்ப தான் சார்ந்த கிராமங்கள் வளம் பல பெற பால் கூட்டுறவு சங்கம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றின் வளர்ச்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். கூட்டுறவைப் பொருத்தவரை தமராக்கியை தமிழகத்தின் முன்மாதிரியாகக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக தலைவராக இருந்து இச்சங்கம் மாநிலத்தில் சிறந்த சங்கம் என நற்சான்று பெற்றதுடன், சிறந்த கூட்டுறவாளர் என்ற விருதையும் பெற்றுள்ளார்.

இன்றைய மக்களின் உடல் நலம் பேணப்படல் வேண்டும் என்ற வகையில் இயற்கை விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து செயற்கை உரம் பயன்படுத்தாமல், மண்புழு உரம் தயாரித்து தானும், தன்னைச் சார்ந்தோரும் பயன்படுத்தியதுடன் மற்றவர்களுக்கும் விநியோகம் செய்து சிறப்புப் பெற்றவர். இயற்கை சார் விவசாயத்திற்குக் கிடைக்கப்பெற்ற விளைபொருட்களை காந்திகிராம அறக்கட்டளை மற்றும் பிற

*அமைப்புக்களுக்கும் விற்பனை செய்துள்ளார். ஊரின் பாதைகளை செப்பனிடல், மரம் வளர்த்தல், பொது நீர்நிலைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை இளைஞர்களை வைத்து சீர் செய்துள்ளார். உழவர்கள் விவசாயப் பணியில் சிறந்தோங்கத்தக்க வகையில் 25க்கும் மேற்பட்ட உழவர் மன்றங்கள் அமைத்து அவைகள் சிறப்பாகச் செயல்பட ஆவன செய்துள்ளார்.*

*குழந்தைகள் நலம்பேண ராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகங்கள் நடத்தி அதன் மூலம் சுமார் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். முதியோர்களுக்கு என காப்பகங்களில் அவர்களைச் சந்தித்து அவர்களால் இயன்ற பணிகளை மேற்கொள்ளச் செய்து அவர்களின் வருவாயை உருவாக்கும் வழிவகுத்தவர்.*

*சமூக நலத்துறையின் பேரு தவியுடன் குடும்ப ஆலோசனை மையம் துவங்கி, குடிபோதை மாற்று சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப்பணிகளில் மக்கள் வந்து பயன்பெறவும், அவர்களை தேடிச் சென்று உதவி செய்யவும் ஆவன செய்துள்ளார். இதுவரை சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் இவரால் நடத்தப்படும் மையத்தின் மூலம் பயன்பெற்றுள்ளார்கள் என்றால் மிகவும் பெருமை கொள்ளச் செய்கிறது. மேலும் இவ்வமைப்பு மூலம் மனநலம் சிறக்க யோகா, தியானம், சிறுதொழில் பயிற்சி போன்ற பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்.*

*இவ்வளவு சிறப்பான அரும்பணியாற்றி மகிழும் நம் உறுமத்தான் "தெய்வம் தந்த மனிதர்" என்ற பட்டத்திற்கு உரியவர் என்றாலும், சட்டங்கள் படிக்காத இந்த காந்திய மனிதனுக்கு, பட்டங்கள் தேடா பகுத்தறிவாளனுக்கு, சிறப்பான பட்டங்கள் தேடிவந்தால் அதில் வியப்பொன்றும் இல்லை. ஆம் சிறந்த கூட்டுறவாளர் விருது, சிறந்த ஆக்கப்பணி ஊழியர் விருது, புலிப்பாணி விருது, மற்றும் பல விருதுகள் இவரைத் தேடி வந்து அவற்றைப் பெற்றும் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.*

*பிறப்பவர் எல்லாம் மனிதனாய்ப் பிறந்தாலும், மனிதனாய் வாழ்வதில்லை. திரு உறுமத்தான் மனிதனாகப் பிறந்து மனிதனாய் வாழ்கின்றார். ஆம், இவர் தெய்வம் தந்த மனிதர் என்பதில் பெருமகிழ்ச்சி கொள்வோமாக.!*

**– எஸ்.வினோபா**

# தாகம் ! வேகம் !! விவேகம் !!!



**- வி. வெங்கட்ராமன்**

நிர்வாக அலுவலர்

கிராமதான நிர்மாண சங்கம், சிவகங்கை

முதலில் சுதந்திரத் தாகம், பின்பு தேச முன்னேற்றத்தில் வேகம், முன்னேற்றச் செயல்களில் விவேகம். இவைகள் தேசப்பணியில் ஈடுபட்ட தியாகிகள், தேசத்தலைவர்கள் செயல்கள்.

ஏழைகள் பொருளாதார சமூக வளர்ச்சியடைய தாகம், செயல்களில் வேகம், நடைமுறைப்படுத்துவதில் விவேகம். இவைகளே அ.உறுமத்தான் அவர்களின் பண்புகள். தும்பைப் பூ போன்ற உடை, தூய்மையான திருநீறு நெற்றியில், கலகலப்பான பேச்சு, சிரித்த முகம், எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் விவேகம். இதுவே அவரது இயல்புகள்.

இவரது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தாலுகாவில் உள்ள தமராக்கி கிராமம். பிறரையும் நண்பராக்கிக் கொள்ளுதல் என்பது தமராக்கியின் பொருளாம். அதாவது தமர்-ஆக்குதல்.

இவரது பெரிய தந்தையின் தூண்டுதலால் சர்வோதய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார். காந்திய நிர்மாணப் பணிகளை உயிராகக் கொண்டார். இவரது தொண்டு இவரது சொந்த கிராமத்திலிருந்து தொடங்கியது. அவர் ஆற்றிய பணிகளைப் பற்றி எனது வாழ்க்கைப் பாதைகள் என்பதில் அனைவரும் அறிந்திட விரிவாக எழுதியுள்ளார். இது தற்புகழ்ச்சியன்று.

1971ஆம் ஆண்டு அரசியல் சார்பற்ற இளைஞர் மன்றம் அமைத்து விவசாயம், மருத்துவம், அரிஜன சேவை செய்தார். இளைஞர்கள் தேசிய ஈடுபாடு கொள்ள சமூகப் புரட்சிக் கருத்துக்களை, காந்தியக் கருத்துக்களை, சுதந்திரப் போராட்ட வரலாறுகளை ஓரங்க நாடகங்களாக நடத்தினார்.

1974ஆம் ஆண்டு, அரிஜனங்கள் சாப்பிட்ட அரிசியில் விஷம் கலந்திருந்ததால் அவர்கள் வாந்தியும் மயக்கமுமடைந்த நிலை கண்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க

மருத்துவர்களையும், அதிகாரிகளையும் அவர் அழைத்து வரப்பட்ட பாட்டினைப் படிக்கும் போது வியப்பாக இருக்கிறது.

மனிதர்களுக்கு மட்டுமல்ல, கால்நடை வளர்ச்சியில் ஆடு மாடு வளர்ப்பில் அக்கறை செலுத்தியது மகிழ்ச்சியளிக்கிறது.

ஆருயிர்க்கெல்லாம் நான்
அன்பு செய்ய வேண்டும். **– வடலூர் வள்ளலார்**

ஆருயிர் அனைத்தும் அமர வாழ்வு
பெறவே அருள்புரிவாய் கருணைக்கடலே. **– கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதி**

கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம், பால் பண்ணை அமைத்து வழிசெய்ததை இன்னும் வாழ்த்தும் நெஞ்சங்கள் பல.

1986 - 87-ல் நடந்த கூட்டுறவு வார விழாவில் மாவட்ட அளவில் சிறந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கமாக தேர்வு செய்து அன்றைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நரேஷ் குப்தா தலைமையில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியான கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரால் பாராட்டுச் சான்று வழங்கப்பட்டது. பின்பு 1987-88-ல் மாநில அளவில் சிறந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு.பழமலை அவர்களால் பாராட்டுச் சான்று வழங்கப்பட்டது. இந்த சங்கத்தின் மூலம் ஆடுகளை வளர்த்து பொருளாதார மேம்பாடு கொண்டு கல்வியில் சிறந்து விளங்கி சொந்த வீடுகளில் வசிக்கும் நிலைக்கு உயர்ந்தனர் மக்கள்.

இயற்கை வேளாண்மை, மண்புழு உரம் தயாரிப்பு, கம்ப்ரஸ்ட் எர்த் பிளாக் தயாரித்தலின் மூலம் மரங்கள் வெட்டுவதைத் தடுத்து சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்க, எரிபொருள் சிக்கனமாக்க நவீனமயமான முறையில் ஹைதராபாத் கபார்ட் நிதிஉதவியுடன் செயல்படுத்தினார்.

காந்திய நிர்மாணத் திட்டங்களான மதுவிலக்கு, தீண்டாமை, கிராமக் குடிசைத் தொழில்கள், கிராமப்புற பெண்களின் பொருளாதார வளர்ச்சி முதலியனவற்றைச் செயல்படுத்திட கிராமதான நிர்மாண சங்கத்தை 1991-ல் நிறுவினார். இச்சங்கத்தின் முக்கியப் பணிகளாக குடிபோதை மாற்றுச் சிகிச்சை மையம், குடும்ப நல ஆலோசனை மையம், கிராமப்புற கூலி வேலை பார்க்கும் குழந்தைகளுக்காக கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தி வருகிறார்.

இவர் செய்தது அளவிடற்கறியது, சொல்லப்பட்டது அளவில் சிறியது.
உழவாரப்பணிகளில் இவர் ஓர் அப்பர்.
இவரது பணிகளெல்லாம் சூப்பர்.

இவரது தொண்டு தொடரவும், மென்மேலும் சிறக்கவும் இறைவன் அருள்புரிவானாக.

**– வி. வெங்கட்ராமன்**

# உழைப்பால் உயர்ந்தவர்

உலகம் நிலைத்திருப்பது எதனால்,
தன்னல மற்ற மனிதர்களால் -
புறநானூற்றுப் புலவன் கூற்றிது.
மற்றவர் மகிழ்ந்திட மகிழ்பவரே
மன்பதையில் மாண்பு பெறுகிறார்!



தும்பைப் பூவைப் போன்ற வெள்ளாடை அணிவார்
தூய்மையான திருநீறு நெற்றியில்
தூய்மையான உள்ளம் துடிப்பான செயல்
சிரித்த முகம், சிந்தையில் விவேகம்
சொல்லிலினிமை, கனிவான உள்ளம்
உறுமத்தானின் உருவம் இதுவே!

சீர்மிகு சிவகங்கை மாவட்டத்தில்
சிறப்பான தமராக்கி கிராமம் இவரது ஊர்.

தமராக்கி என்றால் தமராக்குதல் -
மற்றவரையும் நண்பராக்கிக் கொள்ளுதல்
கற்றோரிடம் இருந்து அறிந்தது
மற்றவரை மனிதராக நேசிக்கும்
மனப்பான்மை பெற்றது இதனாலன்றோ!

மற்றவர் மேம்பாட்டிற்கு உழைத்தார்
உழைப்பால் உயர்ந்து நிற்கிறார்
உழவாரப் பணிக்கோர் அப்பர் - இவரது
எல்லாப் பணிகளும் சூப்பர்!
சர்வோதயத்தில் ஈடுபாடு
காந்திய நிர்மாணப்பணிகளில் ஈடுபாடு
ஈர்த்தது பொதுப்பணி இவரை
இளைஞர் மன்றம் இவரது ஊரில்
தொண்டின் தொடக்கம் இதுவே!

விவசாயம், மருத்துவம், தேசிய ஈடுபாடு
அரிஜன சேவையென அனைத்திலும்
முந்தி நின்றார் முத்திரை பதித்தார்!

எல்லார்க்கும் எல்லாம் என்பதே
சர்வோதயம் என்பதன் பொருள்
ஏழ்மை அகன்றிட  விரும்பினார்
பொருளாதார மேம்பாட்டிற்கு உழைத்தது
கால்நடை வளர்ப்போருக்கு உதவி
பால்மாடு வளர்ப்போருக்கு பால்பண்ணை
ஆடுவளர்ப்போருக்கோர் சங்கம், அதில்
பதினேழு ஆண்டுகள் தலைவராக இருந்தார்
சிறந்த சங்கமென மாநில
மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டது
இவரது நிர்வாகத் திறமையன்றோ!

கிராமங்கள் தான் இந்தியாவின் உயிர்நாடி
அண்ணல் காந்திஜி உரைத்தது.
கிராமதான நிர்மாண சங்கம் கண்டார்
நிர்மாணப் பணிகளை மூச்சென்று கொண்டார்
தொடங்கி இருபத்தேழு ஆண்டுகளாகின்றன

தொய்வின்றிதொடரும் பணிகள்
மதுவிலிருந்து விடுபட சிகிச்சை
இலவச சிகிச்சை, உறைவிடம்
பிரத்யேக ஆலோசனை அவர்தம் குடும்பத்தாருக்கு
மதுவிற்கு எதிரான இந்தப் புரட்சி
மௌனப் புரட்சி, மகிழ்விக்கும் புரட்சி!

மகிழ்ச்சியான இல்லறம் காண
குடும்ப நல ஆலோசனை மையம்
கிராமப்புற மகளிர் பொருளாதார
மேம்பாட்டிற்கு  ஆவின் பால்திட்டம்
நிலத்தின் வளத்தினை பேண
இயற்கை வேளாண்மை உரம்
கூலிப் பெண்களின் குழந்தைகள்
குதூகலத்துடன் பாதுகாப்புடனிருக்க
கிராமப்பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் - அவர்கள்
வயிராற உண்ணவும்,  கல்வி பெறவும்
காப்பகங்கள் பணி செய்கின்றன!

*வியந்தனர் வித்தகப் பெரியோர்
வாழ்நாள் சர்வோதய பணியாளர் விருது
காந்தி கிராம அறக்கட்டளை
அளித்து சிறப்பித்தது, பாராட்டியது!
மேதைகள் நிறைந்த மேற்குவங்கம் - இவரது
மேன்மை அறிந்து அளித்தது
நட்சத்திர சாதனையாளர் விருதை!*

*இவரது தொண்டு தொடர
இல்வாழ்வு இனிதே தொடர்ந்திட
இறைவனை வணங்கி வாழ்த்துவோம்!*

*மலர்கள் பலவகையானவை, பல நிறம் கொண்டவை
வாசமுள்ள மலர்களும் உண்டு, வாசமற்றவைகளும் உண்டு
இதில் மணமுள்ள மலர்களே விரும்பப்படுகின்றன.*

*மனிதர்களிலும் அவ்வாறே
தொண்டு செய்தவர்களே உயர்ந்தவர்கள்
பிறர் பயனடைய வாழ்பவரே உயர்ந்தவர்கள்*

*வல்லமை தாராயோ - இந்த
மானுடம் பயனுற வாழ்வதற்கே - என்று
பராசக்தியிடம் வரம் கேட்கிறார் மகாகவி பாரதி.*

*கேளாமல் இவருக்குத் தொண்டு செய்ய
வரத்தை தந்தாளாம் அன்னை பராசக்தி!*

*அந்தத் தொண்டிற்காக உருவாக்கப்பட்டது இந்த மலர்.
மலரைக் கையிலெடுங்கள் - இதன்
மணத்தை நுகருங்கள்
மகிழுங்கள் - சொல்லுங்கள் - மற்றவர்க்கும்!*

**– மலர்க் குழுவினர்**

# எனது வாழ்க்கைப் பாதைகள்

## அ. உறுமத்தான்

எனது சொந்த கிராமம் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தாலுகாவிலுள்ள தமராக்கி. இது இரண்டு பஞ்சாயத்துக்களைக் கொண்டது. எனது பெரியப்பா திரு. ம. பெரியகருப்பன் அம்பலம், பஞ்சாயத்துத் தேர்தல் இல்லாத காரணத்தால் தொடர்ந்து 13 ஆண்டுகள் தமராக்கி வடக்கு பஞ்சாயத்துத் தலைவராக இருந்தார். எனது தகப்பனார் திரு. ம. அழகர்சாமி அம்பலம். எங்களது குலத் தொழில் விவசாயம். அதை எனது தகப்பனார் தொடர்ந்து செய்து வந்தார். எனது தாயார் வீராயி அம்மாள் வீட்டுப்பணியைக் கவனித்து வந்தார். எனது பள்ளிப் படிப்பிற்குப் பின்பு எனது பெரியப்பாவின் வழிகாட்டுதலின்படி சர்வோதய இயக்கத்தில் சேர்ந்தேன். இது ஊதியம் இல்லாத பணி.

நான் காந்திய நிர்மாணத் திட்டங்களில் ஈடுபாடு கொண்டு மேற்கொண்ட முக்கிய நிர்மாணப் பணிகள் மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கிராமத் தொழில்களின் மூலம் வேலைவாய்ப்பு, மகளிர் முன்னேற்றம், கூட்டுறவு, கிராமப்புறக் குடிசைத் தொழில்கள் வளர்ச்சி, சுகாதாரம் போன்றவையாகும்.

### இளைஞர் மன்றப் பணிகள் – விவசாயம்

1971ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7ஆம் தேதி தமராக்கியை மையமாகக் கொண்டு அரசியல் சார்பற்ற இளைஞர் மன்றம் உருவாக்கப்பட்டது. மன்றத்தின் தலைவர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். உதவித் தலைவர் திரு.கல்யாணி,செயலாளர் திரு.வி.அடைக்கலம், உதவிச் செயலாளர் திரு.எம்.பஞ்சநாதன், பொருளாளர் திரு.கே.மார்க்கண்டேயன். இந்த மன்றத்தின் வழிகாட்டிகளாக ஆசிரியர் செல்வராசு, தமிழ்நாடு கால்நடை விரிவாக்க அலுவலர் திரு.முத்துக்காமாட்சி, தமராக்கி சித்த வைத்திய சாலையின் மருத்துவர் டாக்டர் சிவகுருநாதன் ஆகியோர் இருந்தனர்.



விவசாயம், கால்நடை வளர்ப்பு தமராக்கியின் முக்கியத் தொழில்களாகும். ஏதாவது பொருள்கள் வாங்கவேண்டுமென்றால் அவரவர் உற்பத்தி செய்யும் பொருள்களை பண்டமாற்றுக் கொடுத்து தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்வார்கள். இது வழக்கமாக இருந்தது.





பருவமழை தவறாமல் விவசாயம் நடைபெற்று வந்த அக்காலத்தில் பெரும்பகுதி இயற்கை விவசாயமாக இருந்தது. பூச்சிகளினால் பயிர்களுக்கு சேதமேற்பட்டு, விவசாயிகள் வருமானம் குறைந்து கஷ்டப்பட்டார்கள். இதனை நிவர்த்தி செய்வதற்காக இந்த மன்றத்தின் தலைவர் என்ற முறையில் நானும் மற்றவர்களும் இணைந்து அடிக்கடி விவசாய அதிகாரிகளைச் சந்தித்ததுடன், தலைவராகிய நான் எல்லா விவசாயிகளையும் அதிகாரிகளிடம் நேரில் அழைத்துச்சென்று சம்பந்தப்பட்ட நிலங்களை பார்வையிடச்செய்து, டாக்டர் மருந்துச்சீட்டு எழுதிக் கொடுப்பது போன்று அந்த இடத்திலேயே பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களின் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்தேன். அதனால் உற்பத்தி பெருகி விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்ந்தது.

இது மாதிரி மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக தமரக் கண்மாய், கொத்தங்குளம் கண்மாய், வரத்து கால்வாய்கள் அரசு நிதியின்றி, மக்களைத் திரட்டி தூர்வாரப்பட்டு நீர்நிலைகளில் நீர் பெருகுவதற்கு உதவியாக இருந்தேன். இதனால் விவசாய உற்பத்தி பெருகி மன்றத்திற்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது.

## மருத்துவம்

இந்தப் பகுதியில் சரியான மருத்துவ வசதியின்மையால் குழந்தைகளின் இறப்பு அதிகமாக இருந்தது. அதைத் தடுப்பதற்காக எங்களது கிராமத்திலிருந்து 16 கி.மீ. அப்பாலுள்ள கீழப்பூங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்துடன் தொடர்பு கொண்டேன். ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் விமலா கணேசன் வாரம் ஒருமுறை தமராக்கி வந்து மருத்துவ சிகிச்சையளித்தார். எங்களது கோரிக்கைகளைப் பரிவுடன் ஏற்று மருந்து கொடுத்ததுடன், முதலுதவி செய்வதற்கான மருந்துகளை மன்றத்தின் தலைவர் என்ற முறையில் என்னிடம் வழங்கினார், மருந்துகளைக் கையாளும் முறைபற்றி பயிற்சி கொடுத்ததை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.



இது போன்று 17 கி.மீ. தொலைவிலுள்ள சிவகங்கை அரசு மருத்துவமனை டாக்டர் பிறையணிந்த சீமான் எங்கள் பகுதியிலுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு சிகிச்சை, முதியோர்களுக்கு சிகிச்சை, நோயால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு படுக்கை வசதி செய்து சிகிச்சையளித்தது குறிப்பிடத்தக்கது.

தமராக்கி 2 பஞ்சாயத்துக்களைக் கொண்ட கிராமம், 2 ரெவின்யூக்களைக் கொண்டது. ஜனத்தொகை அதிகமாக இருந்ததால் நோய்களும் அதிகமாகும். அவர்களுக்கு சேவை செய்வதே இந்த மன்றத்தின் முக்கிய நோக்கமாகக் கொண்டதால், தலைவர் என்ற முறையில் இந்த சேவையில் ஈடுபட நேரமின்மையால் எனது சொந்த வருமானத்திற்காக நடத்தப்பட்டு வந்த கடையையும் மூடினேன். சொந்த விவசாயத்தில் கிடைத்த வருமானத்தினால் வாழ்க்கையை நடத்தி வந்தேன்.

### தேசிய ஈடுபாடு



இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக சமூகப் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட நந்தனார் நாடகம் மற்றும் ஓரங்க நாடகங்கள், ஆசிரியர் திரு.செல்வராசு அவர்களால் எழுதப்பட்டு ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை தெருவோரங்களில் நடத்தினோம். இது தவிர சுதந்திரப் போராட்ட வரலாறுகள், காந்தியக் கருத்துக்கள், நாடகங்களாகத் தொகுக்கப்பட்டு பெரிய அளவில் நடத்தப்பட்டன. வெளியில் இருந்து அழைத்து வரப்பட்ட நடிகைகளுடன் இளைஞர் மன்ற உறுப்பினர்களும் நடித்தனர். இதனைத் தொடங்கி வைத்து விழிப்புணர்ச்சியை உண்டாக்க திரு.சொ.பகிரத நாச்சியப்பன், சிவகங்கை கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு.என்.குருமணி மற்றும் இதர பேராசிரியர்கள், அரசியல் சார்பற்றோர் பலர் கலந்து கொண்டனர். இவ்வாறு 3 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது.

நீர்ப்பாசன விவசாயங்களும், மானாவாரி விவசாயங்களும் நடைபெற்று வந்த காலம். சுமார் 1800 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களும், கூலித்தொழிலாளர்களும் சரி பாதியாக இருந்தனர். மானாவாரி விவசாயமான கடலை, சோளம், கேழ்வரகு, துவரை, பாசிப்பயறு, மொச்சைப்பயறு, தட்டைப்பயறு போன்ற விவசாயம் அதிகமாக இருந்ததால் கூலித் தொழிலாளர்கள் அதிக அளவில் வேலை செய்து பிழைப்பு நடத்தி வந்தார்கள். அவர்களது வாழ்க்கை சிறப்பாக அமைந்தது.



## அரிசன சேவை

*1974ஆம் ஆண்டு அரிசனங்கள் வசிக்கும் குடிசைப்பகுதியில் ஒரு சிலருக்கு மயக்கமும் வாந்தியும் வருவதாக இளைஞர் மன்றத்திற்குத் தகவல் கிடைத்தது. முதலில் அந்தக் காலத்து வழக்கப்படி கோடாங்கி குறிகள் பார்க்கப்பட்டன. அதன் பிறகும் மயக்கம் வாந்தி வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் நானும் மற்ற இளைஞர்களும் நேரில் சென்று பார்த்தோம். அப்போது மாலை 5 மணி இருக்கும். 5 மணியிலிருந்து 6 மணிவரை முதலுதவி சிகிச்சைக்காக முயற்சி செய்தோம்.*

*தமராக்கியில் போன் வசதி மற்றும் தகவல் தொடர்பு இல்லாத காலம். சிவகங்கை அப்போது ஒரு கோட்டத் தலைமையகமாக இருந்தது. வருவாய்க் கோட்டத்தலைவராக திரு.ராமசாமி பணியாற்றி வந்தார். நான் சிவகங்கை வரும்போது இரவு 7 மணியாகியது. மருத்துவ அதிகாரிகளை அழைத்து வர முடியவில்லை. சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் சினிமாவுக்குப் போய்விட்டார். கனமழையும் பெய்து கொண்டிருந்தது. தமராக்கியைச் சுற்றி நிறைய தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. இதனைக் கடந்து அரிசன காலனிக்குச் செல்லவேண்டுமென்றால் இடுப்பளவு தண்ணீரில் நடந்து செல்லவேண்டும். எனவே சிவகங்கையிலிருந்து மருத்துவர்களை அழைத்து வர முடியவில்லை. பணம் கொடுத்தாலும் மருத்துவர்கள் கிடைக்கவில்லை. உடனே அஞ்சலகத்திற்குச் சென்று R.D.O. ராமசாமிக்கும், மதுரையிலிருந்த இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் எக்ஸ்பிரஸ் தந்தி கொடுத்தேன்.*

> **"நாற்பது அரிசனங்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்." இப்படிக்கு அ. உறுமத்தான்"**

*என்பது தந்தியின் வாசகம்.*

*நானும் வாடகைக் கார் எடுத்துக்கொண்டு சினிமாவுக்குச் சென்ற டாக்டரை அழைத்து வரக் காத்திருந்தேன். R.D.O.வும் சினிமாவுக்குச் சென்றிருப்பதாகத் தெரியவந்தது. சினிமாக் கொட்டகையில் அவருக்கு எக்ஸ்பிரஸ் தந்தியைக் கொடுத்துவிட்டார்கள். நான் டாக்டர் சீமான் அவர்களின் வீட்டில் இருந்தேன். R.D.O.ராமசாமியும் டாக்டரை அழைப்பதற்க்காக டாக்டர் குடியிருந்த ஓவர்சீஸ் பிள்ளைத் தெருவிற்கு வந்துவிட்டார். சினிமாக் கொட்டகையிலிருந்த டாக்டரும் அழைத்துவரப்பட்டார். அதன்பின் டாக்டர் சீமான், R.D.O. ராமசாமி, நான் என மூவரும் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.*

*மக்கள் குறை தீர்க்கும் நாளில் பல்வேறு கோரிக்கைகளுக்காக அடிக்கடி சென்றதால் எனக்கும் R.D.O. ராமசாமிக்கும் தொடர்பிருந்தது. ஏதோ ஒரு கோரிக்கையைப் பலமுறை வலியுறுத்திச் சொல்லியுள்ளதால் என் மீது கோபமாக இருந்தார். அரிசனங்கள் பாதிக்கப்பட்டதாக நான் பொய் சொன்னதாக டாக்டரிடம் சொன்னார். ஆகவே நான் எனது காரிலும், டாக்டரும் அவரும் ஜீப்பிலும் 16 கி.மீ. அப்பாலுள்ள தமராக்கி வடக்கு சென்றோம். அவர்கள் 2 பேரும் பேண்ட் அணிந்திருந்ததால் அதனை மடித்துவிட்டுக்*

கொண்டு இடுப்பளவு தண்ணீரில் நடந்து வந்தனர். எல்லாக் குடிசைகளிலும் நுழைந்து பார்த்தபோது 40 குடிசைகளிலும் ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் மயக்கமடைந்து இருந்தனர். இதனைப் பார்த்த R.D.O., கீழப்பூங்குடி மருத்துவ அதிகாரியுடன் தொடர்புகொண்டு ரிசர்வ் போலீசாரையும் வரவழைத்தார். இரவு நேரத்தில் இளைஞர் மன்ற உறுப்பினர்கள் உதவியுடன் இடுப்பளவு தண்ணீரில் கால்வாயைக் கடந்து சென்று, பாதிக்கப்பட்ட அனைவரும் தூக்கிவரப்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வேனில் கொண்டு வரப்பட்டனர். தீவிர சிகிச்சை மூலம் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். 10 பேர் மட்டும் 15 நாட்கள் மருத்துவமனையில் இருந்தனர். மற்றவர்கள் 3 நாட்கள் சிகிச்சைக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் சாப்பிட்ட வரகு அரிசி பரிசோதனை செய்யப்பட்டது. அதில் விஷம் கலந்திருப்பது தெரியவந்தது. வரகு விளைந்த இடத்தில் விஷச் செடிகளைக் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. சமுதாயச் சேவையாக முதியோர்களுக்கு ஓய்வூதியத் தொகை கிடைக்கவும், நோயுற்றவர்களை சிவகங்கை, மதுரை அரசு மருத்துவமனைகளில் சேர்ப்பதும் எங்கள் வழக்கமான பணியாக இருந்தது.

### ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கம் உதயம்

தமராக்கி இளைஞர் மன்றச் செயல்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட, சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் எங்களைத் தேடி வந்தனர். பல்வேறு கோரிக்கைகள் வரத் தொடங்கின. எங்கள் மன்றத்தில் சம்பளத்திற்குப் பணி செய்பவர்கள் இல்லாததாலும் மன்ற உறுப்பினர்கள் பல்வேறு வேலைகளுக்குச் சென்றுவிட்டதாலும் 5 ஆண்டுகளுக்குப் பின்பு இளைஞர் மன்றத்தின் செயல்பாடுகள் குறையத் தொடங்கின.

நான் பள்ளிப் பருவத்தில் கை ராட்டையால் நூல் நூற்று கதர்க் கடையில் விற்றுவந்த காரணத்தாலும் எனது பெரியப்பா திரு.பெரியகருப்பன் அம்பலம் சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தாலும் சர்வோதய இயக்கத்தின் மீது ஈடுபாடு கொண்டு அதில் சேர்ந்தேன்.

எங்கள் பகுதியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில் ஆடு வளர்ப்பு ஆகும். விவசாய காலங்களைத் தவிர மற்ற காலங்களில் ஆடு, மாடு வளர்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர் மக்கள். ஆடுகள் வளர்ப்பின் போது அவற்றின் இறப்பு விகிதம் அதிகரித்து வந்ததால் பெரும்பாலான விவசாயிகள் அந்தத் தொழிலைச் செய்ய ஆர்வம் காட்டவில்லை.








அவர்கள் என்னை அணுகி ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவர்களை அழைத்துவரும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆடுகளுக்கு தடுப்பூசி போடுவது, தொடர் சிகிச்சையளிப்பது போன்றவற்றைச் செய்ய கால்நடை பராமரிப்பு மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு அவர்கள் தடுப்பூசி போட்டார்கள். ஆனால் தொடர் சிகிச்சை நடைபெறவில்லை. தடுப்பூசி போட்டதால் ஆடுகள் இறப்பு பாதியாகக் குறைந்தது. இதனால் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்க, கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டேன். சங்கம் அமைப்பதற்காக வங்கிகள் நிதியுதவி செய்தால் சங்கம் அமைக்க அனுமதியளிப்பதாக உறுதி கூறினார்கள். சிவகங்கையிலுள்ள அனைத்து வங்கிகளும் தமராக்கியில் சங்கம் அமைக்க நிதியுதவி செய்ய மறுத்துவிட்டன.

நான் சர்வோதய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால், பூமிதான வாரியத்தின் தலைவர் சுவாமி வித்யானந்த சரஸ்வதி அவர்களை அணுகினேன். அவர் பாண்டியன் கிராம வங்கியின் இயக்குநராகவும் இருந்தார். அப்போது தமராக்கி ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கத்திற்கு கடனுதவி வழங்க பாண்டியன் கிராம வங்கித் தலைவருக்கு பரிந்துரை செய்தார். அதன் காரணமாக கீழப்பூங்குடி, பாண்டியன் கிராம வங்கியின் மேலாளர் சங்கத்தைப் பார்வையிட்டார். அவர் தனது பரிந்துரையில், “மிகவும் பின்தங்கிய பகுதி, வங்கித் தொடர்பில்லாத கிராமம், ரெவின்யூ ரிக்கார்டுபடி வாராக்கடன் நிலுவையிலுள்ளது; எங்களுக்கும் அதிக தூரம் அங்குசென்று பணியாற்ற முடியாது; கடன் வசூல் செய்ய, அடிக்கடி பார்வையிட அதிக தூரத்தில் இருப்பதாலும், வங்கி விதிகளின்படி 17 கி.மீ.க்கு அப்பால் இருப்பதாலும், 8 கி.மீ.க்குள் உள்ள இடத்திற்குத்தான் கடன் கொடுக்க வேண்டுமென்று தலைவரின் ஆணையிருப்பதாலும் வங்கிக்கடன் கொடுக்க இயலாது” எனக் குறிப்பிட்டிருந்த இக்கடிதம் வங்கி இயக்குநரான சுவாமி வித்யானந்த சரஸ்வதியின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. நான் சர்வோதய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு, கொடுக்கும் பணிகளை நிறைவேற்றுவதை அறிந்த சுவாமி வித்யானந்த சரஸ்வதி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, “திரு.உறுமத்தான் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது; கொடுத்த கடன் கண்டிப்பாகத் திரும்பிவரும்.பல இடங்களில் வங்கிகளில் வாராக்கடன் நிலுவையில் உள்ளது. இயக்குனராகிய நாங்கள் ஒரு சில இடங்களில் கடன் கொடுக்க பரிந்துரை செய்வதை மறுப்பது வருந்ததக்கது” என சேர்மனுக்குக் கடிதம் எழுதினார். உடனே பாண்டியன் கிராம வங்கி சேர்மன் அவர்கள் கீழப்பூங்குடி பாண்டியன் கிராம வங்கி மேலாளர் அவர்களுக்கு தகுதியுள்ள அனைவருக்கும் கடன் வழங்க சம்மதக் கடிதம் (Concurrence Letter) வழங்கும்படி உத்தரவிட்டார். வங்கி மேலாளர், சிவகங்கையிலுள்ள கால்நடை

பராமரிப்புதுறை உதவி இயக்குநருக்கு, தமராக்கி ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைந்திட சம்மதக் கடிதம் வழங்கினார்.

கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் டாக்டர் நடராஜன், ஒப்புதல் கடிதம் வந்தவுடன் தற்காலிகத் தலைவரை நியமித்து உறுப்பினர் சேர்க்கைக்கு அதிகாரம் கொடுத்ததால் 200க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்தனர். சேர்ந்த உறுப்பினர்கள் மூலம், கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் முன்னிலையில் நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

தகுதியுள்ள பல இடங்களில் ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பல முறை அணுகியும் அனுமதிக் கடிதம் கிடைக்கவில்லையென்றும், தமராக்கி சங்கத்திற்கு எந்தவித நிபந்தனையுமின்றி பாண்டியன் கிராம வங்கி கடன் வழங்க ஒப்புதல் கொடுத்ததற்கு கால்நடை பராமரிப்புதுறை இயக்குநர், வங்கிக்கு நன்றிக் கடிதம் அனுப்பினார். 20 –10 –1981–ல் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் பதிவுசெய்யப்பட்டது. ஆரம்பத்தில் தகுதியுள்ள 71 நபர்கள் உறுப்பினர்கள். இதன் பங்கு மூலதனம் ரூ.1756. தொடர்ச்சியாக 311 உறுப்பினர்களுடன் பங்கு மூலதனம் ரூ.29,830 ஆக உயர்ந்தது. ஆடு வளர்ப்புக் கடன் கேட்டு, தமராக்கி வடக்கு, தமராக்கி தெற்கு, இலுப்பகுடி, ஒக்குபட்டி ஆகிய பஞ்சாயத்துக்களிலிருந்து மக்கள் எங்களது சங்கத்திற்கு வந்தனர். அந்தக் காலத்தில் வங்கி நிர்வாகம், கேட்ட கடன் தொகையை சங்கத்திடம் மொத்தமாகக் கொடுத்துவிடும். கடன் மனுக்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரில் இருக்கும். விதிமுறைகளின்படி 100க்கு 35% விவசாயக் கூலிகளாக இருக்க வேண்டும். இதில் அரிசனங்கள், மலைவாழ் மக்கள், இதர பின்தங்கிய வகுப்பினர் மற்றும் இதர சாதியினருக்கு 65% கடன் வழங்க அரசின் மூலம் ஆணையிடப்பட்டது.50% சொத்துக்களின் அடிப்படையிலும்,மீதம் 50% விவசாயக் கூலிகளுக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. விதிமுறைகளின்படி சொத்துள்ளவர்களுக்கு 13 வருஷம் வில்லங்கச்சான்று எடுத்து பத்திரப்பதிவு செய்யப்பட்டு, அரசு விதிகளின் அடிப்படையில் தவணை கடந்த பாக்கியில்லை என்ற சான்று அளிக்கப்பட்டு, மற்ற வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு அளித்ததில் 53 நபர்கள் கடன் பெறத் தகுதியானவர்கள் என்று தேர்வு செய்யப்பட்டனர். இதில் ஆண்களும், பெண்களும், அரிசனங்களும் அடங்குவர். ஒரு நபருக்கு ரூ.3500 வீதம் மொத்தம் ரூ.1,85,000 வழங்கப்பட்டது. அனைவரையும் ஆடுகளை வாங்க வைப்பது சிரமமாக இருந்தது. நிர்வாகம் பொறுப்பேற்று அனைவருக்கும் ஆடுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. அரிசனங்களுக்கு 50%–ம் மற்றவர்களுக்கு 33%–ம் மானியமாகும். இது கடன் தொகைக்கு வரவு வைக்கப்பட்டது. வங்கி 8.50% வட்டியில் சங்கத்திற்கு கடன் வழங்கியது. உறுப்பினர்களுக்கு 13% வட்டியில் கடன் வழங்கப்பட்டது. பின் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கெனத் தனி அலுவலகம் திறக்கப்பட்டது.

கொத்தங்குளம் கிராமம், தமராக்கி வடக்கு ஊராட்சியில் உள்ளது. இந்தக் கிராமத்தில் 60 ஆதிதிராவிட குடும்பங்கள் உள்ளன. சிவகங்கையில் உள்ள ஏட்டு நாராயண அய்யங்கார் அவர்களால் நில உச்சவரம்புச் சட்டத்தினால் கொடுக்கப்பட்ட நிலத்தில் 3 சென்ட் வீதம் 45 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும் 1 ½ ஏக்கர் நிலப்பட்டாவும்

என மொத்தம் 60 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அங்குள்ள அரிசனங்கள் அனைவருக்கும் ஆடு வளர்ப்புக் கடன் வழங்கப்பட்டது. தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வாங்கிக் கொடுக்கப்பட்டது.

## மத்திய விவசாய அமைச்சர் ஆர்.வி.சுவாமிநாதன் வருகை

பூமிதான வாரியத்தலைவர் சுவாமி வித்யானந்த சரஸ்வதி அவர்கள் தலைமையில், பாண்டியன் கிராம வங்கி சேர்மன், உயரதிகாரிகள், பாண்டியன் கிராம வங்கி இயக்குநரும் சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி.எஸ்.ஜெயலட்சுமி, மத்திய அரசு நிதித்துறைச் செயலாளர், சிறப்பு விருந்தினராக மத்திய ராஜாங்க அமைச்சர் திரு.ஆர்.வி.சுவாமிநாதன் ஆகியோரும், தமிழ்நாடு அரசின் சார்பாக கால்நடை பராமரிப்புத்துறை உயர் அதிகாரி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் செல்லமுத்து ஆகியோரும் கலந்து கொண்ட விழா ஆடுகள் வழங்கும் விழாவாக நடத்தப்பட்டது.



30.10.1982

பின்பு இந்தச் சங்கத்தை நல்ல முறையில் நடத்துவதற்காக செட்டிநாடு அரசு கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை அரசு கால்நடைப் பண்ணை, சின்னசேலம் அரசு கால்நடைப் பண்ணை ஆகியவற்றில் ஆடு வளர்ப்பு - பராமரிப்பு நடைபெறும் விதம், தடுப்பூசி எந்தெந்தக் காலங்களில் எவ்வாறு போடுகிறார்கள், வைத்திய உதவி எவ்வாறு நடைபெறுகிறது, தர வாரியாக ஆடுகள் இருப்பு விபரம் எவ்வாறு பராமரித்திருக்கிறார்கள், தீவனங்கள் எவ்வாறு கொடுக்கப்படுகிறது, அதை எப்படிக் கையாளுகிறார்கள், ஆட்டின் எடையைக் கூட்டுவதற்கு எவ்வாறு முயற்சிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிந்திட ஒவ்வொரு பண்ணையிலும் 3 நாட்கள் தங்கி பயிற்சி பெற்றுக்கொண்டு வந்தேன்.

மாநில அரசு தேர்ந்தெடுத்த சிறந்த ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தை (மாசார்பட்டி, கோவில்பட்டி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்) பார்வையிட்டு வந்தேன். அங்கு இருந்த முறையில் எங்கள் சங்கத்தில் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டன.

ஆடுகளுக்கு 4 முறை குடற்பூச்சி மருந்துகள் கொடுக்கப்பட்டன. ஆண்டிற்கு 3 முறை உன்னி மருந்து அடிக்கப்பட்டது. சங்கத்திலுள்ள அனைத்து ஆடுகளுக்கும், கடன் வழங்காத இதர ஆடுகளுக்கும் இவை முறையாக மேற்கொள்ளப்பட்டன. ஆடுகள், குட்டிகளை தனித்தனியாக வளர்க்கவும், கிடாய்களை ஆடுகளுடன் விடாமல் தனியாக வளர்க்கவும் அவ்வப்போது ஆடுகள் வளர்ப்போருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆடுகள் எடையளவை அறிந்து, அதைத் தனித்தனியாக கவனித்து பராமரிக்கும்படி ஆடு வளர்ப்போருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. ஆடுகள், குட்டிகள் விபரம், பிறந்த குட்டிகள் விகிதம், இறப்பு விகிதம் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு நாளும் இருப்புக்கணக்கு எழுதப்பட்டது. நாள் தோறும் இருப்பு சரிபார்க்கப்பட்டது.

## இனவிருத்தி காலம்

சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஆடுகளைத் தனித்தனியாக வளர்க்கவும், ஆடுகளின் எண்ணிக்கையைக் கூட்டவும், ஆடுகளின் இனவிருத்தி காலங்களை உறுப்பினர்களுக்குத் தெரியச்செய்யவும் பயிற்சியளிக்கப்பட்டது. 5 மாதங்கள் ஆடுகளின் சினைக் காலமாகும். இனவிருத்திக்கான கிடாய்களை ஆடுகளுடன் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் பட்டியிலே கட்டிவைத்து தனித்தீவனம் கொடுக்க பயிற்சியளிக்கப்பட்டது. இனவிருத்திக்கான ஆடுகளுக்கு காதுகளில் டோக்கன் பொருத்தப்பட்டது. காலையிலும் மாலையிலும் இனவிருத்திக்கான கிடாய்களின் முன்கால் பகுதியில் ரெட்ரோஸ் பவுடரைத் தடவி, பருவத்திற்கு உள்ள ஆடுகளின் பகுதியில் விடப்பட்டன. எந்தெந்த ஆடுகளில் கிடாய்கள் விழுகிறதோ அந்த ஆடுகளின் டோக்கனை குறித்துக்கொண்டு ஒருமாதம் கழித்து அந்த ஆடுகளைக் கவனித்துப் பார்த்தால் சினைப்பட்ட ஆடுகள் தெரிந்துவிடும். சினைப்பட்ட ஆடுகள் அனைத்தையும் தனியாக வளர்ப்பதுடன் விசேஷ தீனியும் கொடுக்க வேண்டும். ஆடுகள் சினைப்பட்ட தேதியில் இருந்து 147ஆவது நாள் குட்டி ஈன்று விடும். குட்டிகளையும் ஆடுகளையும் தனித்தனியாக 3 மாதம் வரை பிரித்து வளர்க்கவும் அவ்வப்போது பயிற்சியளிக்கப்பட்டது.

ஒருநாளைக்கு நான்கு முறை ஆடுகளுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. வளர்ப்பு முறையை சுருக்கமாகச் சொல்லித்தர விரிவாக பயிற்சியளிக்கப்பட்டது.

## ஒரு வழி தலைமுறை

எங்கள் பகுதியின் ஆடுகள் கீழக்கரிசல் இனம் இராமநாதபுரம் வெள்ளை இனம் என இரண்டு வகை உண்டு. இரண்டு வகைகளிலும் கலப்பிருந்தது. இந்தக் கலப்பினைப் பெருக்குவதற்கு ஆடு வளர்ப்போருக்குப் பயிற்சியளித்து, இராம்நாட் ஒயிட், கீழக்கரிசல் எனத் தனித்தனியாகப் பிரித்து வளர்க்கப்பட்டது. ஆடு வளர்ப்பு சம்பந்தமாக பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. வாங்கிய கடன் முறையாகச் செலுத்தப்பட்டதால் வங்கியைப் பொருத்த வரையில் கடன் பாக்கி இல்லை. 72 உறுப்பினர்களில் 53 பேர் கடன் பாக்கி வைத்திருந்தனர். இரண்டாவது முறை 63 நபர்களுக்கு







வங்கி விதிகளின்படி நேரடியாகக் கடன் வழங்கப்பட்டது. அது வசூலாகிக் கொண்டிருந்தது. மதுரை வானொலி நிலையத் தலைவர் இரண்டு மூன்று முறை வந்து உறுப்பினர்களைப் பேட்டி எடுத்திருக்கிறார். ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாக நடப்பதையறிந்து இதர மாவட்டங்களி லிருந்தும் மக்கள் பார்வையிடத் தொடங்கினார்கள். கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் தனிக்கவனம் செலுத்தி வாரம் இரு முறை கால்நடை உதவி மருத்துவரை அனுப்பி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர்.

தமிழ்நாடு அரசின் நிதித்துறை உதவிச் செயலாளர் நேரில் வந்து சங்கத்தைப் பார்வையிட்டு 25 அரிசனங்களுக்கு மத்திய அரசின் நிதியிலிருந்து தமிழ்நாடு அரசு மூலம் தலா ரூ.7500 கடன் வழங்க உத்தரவிட்டார். அதில் பாதி தமிழ்நாடு அரசின் மானியம். மீதித்தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இடையமேலூர் கிளை தானாகவே கடன் கொடுக்க முன்வந்தது. இது முற்றிலும் அரிசனங்களுக்கு மட்டும். கடன் தொகை முறையாக வசூலானதைத் தொடர்ந்து தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் அவர்கள், தலச்சேரி இன வெள்ளாடுகளை புதுக்கோட்டை கால்நடை பண்ணையிலிருந்து குறைந்த விலையில் வழங்க ஏற்பாடு செய்தார், ஏழைத் தாய்மார்களுக்கும் குழந்தை வைத்திருப்பவர்களுக்கும் அந்த ஆடுகள் வழங்கப்பட்டன.

## உதவி இயக்குநர் நியமனம்

சிவகங்கையில் கால்நடைநோய் புலனாய்வுத்துறையில் பணியாற்றிவந்த உதவி இயக்குநர், ஒருநாள் விட்டு ஒருநாள் சங்கப் பணிகளைப் பார்வையிட்டார். அவர் தலைமையில் மூன்று கால்நடை மருத்துவர்கள் பணியாற்றி வந்தனர். அவருக்கென சிவகங்கையில் தனியாக ஒரு அலுவலகம் உள்ளது. ஆராய்ச்சிக்கூடம் மற்றும் பெரிய வேன் இருந்தது. அவர்தான் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தின் கால்நடைநோய் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான டாக்டர் நடராஜன்.



*தமிழ்நாடு முழுமைக்கும் வாய்க்கனை, கால்கனை, ஒட்டுண்ணி எனப் பல வகை நோய்களை ஆராய்ச்சி செய்வதற்காக, தமராக்கி ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தை மையமாகக் கொண்டு செயல்பட உத்தரவிடப்பட்டது. சங்கத்தின் பணியாளர்களாக ஐந்து பேர் பணியாற்றத் தொடங்கினர். ஆடுகள், ஆடு வளர்ப்போரின் எண்ணிக்கையும் அதிகமாகி, அவரவர்களின் தேவைக்கு விற்றது போக தோராயமாக 7500 ஆடுகள் சங்கத்தில் இருப்பு இருந்து கொண்டிருந்தது.*

*கூட்டுறவு தணிக்கைத் துறையின் துணைப்பதிவாளர் தலைமையில் இச்சங்கம் தணிக்கைக்குட்படுத்தப்பட்டது. எல்லா ஆடுகளும் முறையாக காப்பீடு செய்யப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பு முறையாக வழங்கப்பட்டது. முறையான சிகிச்சை இருந்ததால் இறப்பு விகிதம் குறைந்திருந்தது. முதலில் இறந்த ஆடுகளின் இறப்பிற்கு உரிய படிவம் அனுப்ப வேண்டும். அதில் பல தாமதங்கள் இருந்ததையறிந்த மதுரை நியூ இந்தியா காப்பீட்டு நிறுவன கோட்ட அலுவலகம், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகிய எனக்கு இந்தப் படிவம் வழங்க அதிகாரம் வழங்கியது.*

*3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்திருந்தாலும், சங்கத்தை நிறுவி 17 ஆண்டுகள் வரை இதன் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.*

*1986-87–ல் நடந்த கூட்டுறவு வார விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் நரேஷ் குப்தா அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியான கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரால் மாவட்ட அளவில் 'சிறந்த கூட்டுறவு சங்கம்' எனக் கேடயம் வழங்கப்பட்டது. 1987-88-ல் மாநில அளவில் சிறந்த ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் அன்றைய மாவட்ட ஆட்சியர் திரு.பழமலை அவர்களால் கேடயம் வழங்கப்பட்டது. பரிசு வழங்கிய பின், மாவட்ட ஆட்சியர் சங்கத்திலுள்ள எல்லா ஆடுகளையும் பார்வையிட வேண்டுமென்றதால், அவரது விருப்பத்திற்கிணங்க நியூ இந்தியா காப்பீட்டு நிறுவனம், பாண்டியன் கிராம வங்கி, கீழப்பூங்குடி கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த கால்நடை வைத்திய முகாம், மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. எல்லா ஆடுகளுக்கும் தனித்தனியாக பட்டி அடித்ததை மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் பார்த்தனர். இந்த விழாவில் ஆடு வளர்ப்பில் தவணை தவறாமல் கடன் திருப்பிச் செலுத்தியதற்காக வங்கியின் சார்பாக 7 நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் பரிசு வழங்கப்பட்டது. இந்தச் சங்கம் மேலும் வளர்ச்சியடைய சென்னையிலுள்ள கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் டாக்டர் சி.கே. கல்யாணசுந்தரம் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையின் ஆராய்ச்சி வளர்ப்புக்காக, ஒருவழித் தலைமுறை கீழக்கரிசல் இன ஆடுகள் எங்களிடம் இருப்பதையறிந்து அவற்றை வாங்க உத்தரவிட்டதால், கால்நடை இணை இயக்குநர் தலைமையிலான குழுவினர் நேரடியாக வந்து தேர்வு செய்தனர். அன்றைய சந்தை விலைப்படி ஒரு ஆட்டின் ரூ.35; ஆனால் ரூ.70 கொடுத்து அரசாங்கம் வாங்கியது. தலைவர் என்ற முறையில் அந்தக் குழுவில் நானும் இருந்தேன்.*

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் வெள்ளச்சேதங்கள் ஏற்பட்டதற்கான நிவாரணம் வழங்கும் குழுவில் உறுப்பினராக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்பட்டேன்.

## ஆடு வளர்ப்போரின் பொருளாதார உயர்வும் அவர்களது மதிப்பு மேம்பாடும்

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டபின் முறையான பயிற்சி பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டதால், ஆடுகளின் இறப்பு சதவீதம் குறைந்து, ஆடுகளின் எண்ணிக்கை அதிகரித்தது. தேவைக்கு அதிகமான ஆடுகளை விற்று விட்டதால் பயனாளிகளின் பொருளாதார நிலை உயர்ந்தது. அதனால் அவர்கள் வீடு, நிலம் முதலியவற்றை வாங்கினர். அவர்களின் குழந்தைகளின் படிப்பு, மற்ற வகைகளிலும் அவர்களின் பொருளாதார நிலை மேம்பட்டது.

## சர்வோதய இயக்கம்

நான் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்தாலும், சர்வோதய இயக்கத்தில் தீவிரமாக இருந்தேன். அதனால் ஆடு வளர்ப்பு, பால்மாடு வளர்ப்பு, பழைய கிணறுகளைத் தூர்வார விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல், வீடு கட்டுதல் மற்றும் இதர ஆக்கப் பணிகளுக்காக காந்திய நிறுவனமான அசேபாவில் பொறுப்பில் நியமிக்கப்பட்டேன்.



கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களுடன்



வார்தாவில், மகாத்மா காந்தியின் மருமகள் லட்சுமியுடன்



குமரேசன், (காரைக்குடி சர்வோதய சங்கச் செயலாளர்),
அ.உறுமத்தான் (சர்வோதய மண்டல் செயலாளர்)
திரு.பால்விஜன், (வினோபாஜி சீடர்),
திரு.சங்கராழ்வார் (தமிழ்நாடு சர்வோதய சங்கத் தலைவர்)

## கை ராட்டையில் தேர்ச்சி

பள்ளிப்பருவத்தில் நான் ராட்டையில் நூல் நூற்று, ஒரு சிட்டம் நான்கு அணா என விற்பேன். இதை நான் சர்வோதயத்தில் சேர்ந்த பிறகும் செய்து வந்தேன். எங்கள்

*கிராமத்தில் இருந்த வயதான மூதாட்டியிடம் கைராட்டையில் நூல் நூற்கும் நுட்பத்தைக் கற்றுக்கொண்டு நாளொன்றுக்கு 0.75 பைசா சம்பாதித்தேன்.*

## சர்வோதயப் பணிகள்

*சிவகங்கை தாலுகாவில் காந்திஜியின் நிர்மாணப் பணிகளை அமுல்படுத்த விரும்பினோம். காந்திஜியின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ய சில கிராமங்களில்*



*தங்கினோம். பல்வேறு குழுக்களாகப் பிரிந்து இது செயல்பட்டது. நான் இப்பணியின் அமைப்பாளர்.*

## காந்தி அஞ்சலிக் கூட்டம் – சர்வோதயத் தலைவர் திரு.ஜெகந்நாதன் வருகை

*பூமிதான வாரியத்தின் சிவகங்கை மாவட்டப் பொறுப்பிலுள்ள பூமிதானத் தாசில்தார், பூமிதான வருவாய் ஆய்வாளர் திரு. சரவணமுத்து ஆகியோர் தமராக்கி வந்து, பூமிதான நிலங்களைப் பார்வையிட்டு, அதன் பயன்தாரர்களை (நிலம் பெற்றவர்களை) அழைத்துப் பேசி, திரு.ஜெகந்நாதன் வருகையின்போது காந்தி அஞ்சலிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர்.*

*எனது பெரியப்பா திரு. பெரியகருப்பன் அம்பலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் கிராம சபைத் தலைவராகவும் இருந்தார். சர்வோதயத் தலைவர் திரு. ஜெகந்நாதன் அவர்களும், தமிழ்நாடு பூமிதான வாரியத் தலைவர் திரு.எஸ்.ஆர்.பூபதி அவர்களும், சர்வோதயத் தலைவர் திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், பூமிதான வாரியத் தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆகியோர் தமராக்கியில் நடந்த காந்தி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.*

*பூமிதான நிலம் பெற்றவர்களை அழைத்துவர கிராமத்தில் தண்டோரா போடப்பட்டு காந்தி அஞ்சலிக் கூட்டத்திற்கு வரும்பொழுது நன்கொடையாக நெல், பணம் வழங்கும்படி கூறப்பட்டது. இதில் நெல் மட்டும் 5 மூடை கிடைத்தது. கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. பெரியகருப்பன் அம்பலம் காந்தி அஞ்சலிக் கூட்டத்தில் ஒரு தொகையை நன்கொடையாக வழங்கினார். தொகை எவ்வளவு என்று தெரியவில்லை.*

பூமிதான விவசாயிகள் சுமார் 500 பேர், ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாலை சுமார் 4.00 மணி அளவில் ஊர் பொதுமந்தையில் கூட்டம் நடைபெற்றது. மக்கள் வழங்கிய நெல் ஏலம் விடப்பட்டது. அந்தத் தொகை காந்தி அஞ்சலிக் கூட்ட நன்கொடையாக திரு.ஜெகந்நாதன் அவர்களிடம் வழங்கப்பட்டது. அது ஒரு இனிய நாள். திரு.பெரியகருப்பன் அம்பலம் இல்லத்தில் மாலை 6.00 மணி அளவில் இட்லி, தோசை, இதர பலகாரங்கள் சைவ உணவாக வழங்கப்பட்டன. இதன் பிறகு எனது சர்வோதய ஈடுபாடு மேம்பட்டது. இந்நிகழ்ச்சிக்குப் பின் திரு.எஸ்.ஆர்.பூபதி துறவறம் பூண்டது குறிப்பிடத்தக்கது. பின்பு அவரது பெயர் சுவாமி வித்யானந்த சரஸ்வதி என்று விளங்கியது.

## தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டம்

தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் மூலம், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் பூமிதான வழிகாட்டிக் கமிட்டிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

1972 முதல் 1990 வரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்த பூமிதான வழிகாட்டுக் கூட்டங்களின் முடிவுப்படி சிவகங்கை, காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை வட்டாரங்களில் கிராமசபைகள் அமைக்கப்பட்டன. கிராமசபைகள் மூலம் தீர்மானம் செய்து நிறைவேற்றப்பட்ட பணிகளை அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர், பூமிதான வழிகாட்டுக்கூட்டத்தில் அதிகாரிகளையும் வரவழைத்து ஆய்வு செய்தார். வீட்டு மனைப் பட்டா வழங்குதல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், ஊரக மேம்பாட்டுத் திட்டத்தில் உழவு மாடுகள் வழங்குதல், குடிநீர்த்திட்டத்திற்கான அடி பைப்புகள் அமைத்தல், நீராதாரங்களை உருவாக்குதல், வரத்துக்கால்வாய்களை செப்பனிடுதல் போன்ற பணிகள் அரசு நிதி உதவியுடன் மக்கள் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக 9-12-1981 தேதிய மாவட்ட ஆட்சியர் உத்தரவிற்கிணங்க, தமராக்கி முதல் உசிலம்பட்டி வரையிலான 8 கிமீ. புதிய சாலை, அப்போதைய மதிப்பீட்டின்படி ரூ29,500/- செலவில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு.சுப்பராயலு, பூமிதானக் கமிட்டித் தலைவர் திரு. A.வீரையா அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினரால் செய்து முடிக்கப்பட்டது.

## மாநில அரசுப் பணி

1967 முதல் 1969 வரை, தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையில் மந்தைக் காப்பாளர் வேலை எனக்குக் கிடைத்தது. இந்த வேலைக்காக சின்னசேலம் கால்நடைப் பண்ணையில் மூன்று மாதம் கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு பயிற்சிகள் பெற்றேன். மாவட்ட கால்நடை அலுவலர் Dr. C.K. கல்யாணசுந்தரம் அவர்கள் விருதுநகர் பகுதியில் நான் பணி செய்ய உத்தரவிட்டார். அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, குன்னூர் கிராமத்தில் ஆடுகம்பள விரிவாக்க மையத்தில் வேலை பார்த்தேன். அப்போது, மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டையில் 1968-ல் கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு சம்பந்தமான கண்காட்சியும், மாநாடும் நடைபெற்றது. குன்னூரில் உள்ள கால்நடை மருத்துவரும், அப்போதைய ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சந்திரஜெகநாதன் அவர்களும் உரையாடுவது போன்று, "ஆடுகள் வளர்க்க முடியுமா?"

*என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியிருந்தேன். அக்கட்டுரையை அருப்புக்கோட்டை மாநாட்டு மலரில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.*

*நான் ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்த போது நான் பெற்ற பயிற்சிகள் மிகவும் பயனுடையதாக இருந்தது. விருதுநகருக்கு நான் மாற்றப்பட்டு கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியில் இருந்தேன். அப்போது ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, சாத்தூர் தாலுகா முத்துராமலிங்கபுரம், துலுக்கப்பட்டி, கன்னிராஜபுரம், வெம்பக்கோட்டை, ஆலங்குளம், அருப்புக்கோட்டை பகுதிகளான, காரியாபட்டி, புதுப்பட்டி, மல்லாங்கிணாறு, நரிக்குடி ஆகிய பகுதிகளில் விரிவாக்கப் பணிகளைச் செய்தேன்.*

*இராமநாதபுரம் தாலுகா, இராமேஸ்வரம், மண்டபம், உச்சிப்புளி, தினக்குளம், வண்ணான்குண்டு, களிகண்குண்டு, திருப்புல்லாணி மற்றும் கடலோரப் பகுதிகள் ஆகிய இடங்களில் தடுப்பூசி போடுவதற்காக கால் நடை மருத்துவக் குழுவில் பணியாற்றி வந்தேன். எனது பெரியப்பாவின் அறிவுரைப்படி அந்தப் பணியிலிருந்து விலகிவிட்டேன்.*

**எல்.ஐ.சி.பணிகள்:** *1990ஆம் ஆண்டிலிருந்து எல்.ஐ.சி.முகவராக சுய வருமானத்திற்காக செயல்பட்டேன், எல்.ஐ.சி.யில் படிப்படியாக உயர்ந்து சேர்மன் கிளப் உறுப்பினராக ஏழாண்டுகள் இருந்தேன். ஆயுள் காப்பீட்டு முதன்மை ஆலோசகர் என்ற கௌரவத்தையும் கொடுத்தார்கள்.*

## தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் தொடர்பு

*சிவகங்கை வட்டாரத்தில், ஸ்ரீரங்கராஜன் என்ற பாப்பாத்துரை அவர்களுடன் இணைந்து, குன்றக்குடி ஆதீனத்தால் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அளவிலான தமிழ்நாடு தெய்வீகப் பேரவையில், குன்றக்குடி அடிகளாரால் உறுப்பினராக நியமிக்கப்பட்டு 1984 முதல்1987 வரை பணியாற்றி வந்தேன்.*

*சிவகங்கை வட்டாரத்தில் குட்டிதின்னி என்ற இந்திராநகர் அரிசன சேவைக்காக தேர்வு செய்யப்பட்டது. சிவகங்கை வட்டாரத்திலுள்ள அனைத்துத் துறை அரசு அதிகாரிகளுடன், ஸ்ரீரெங்கராஜன் என்ற பாப்பாத்துரை அவர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும், நான் செயல் அலுவலராகவும் குன்றக்குடி அடிகளாரால் நியமிக்கப்பட்டோம். நாங்கள் செய்த பணிகளை மாதம் ஒரு முறை குன்றக்குடி அடிகளார் ஆய்வு செய்தார். மேலும் தேவைகளுக்கு, அரசு அதிகாரிகள் ஒத்துழைக்க கடிதங்கள் மூலமாகவும் போன் மூலமாகவும் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றன. சம்பளமில்லா, பயணப்படி இல்லா பணியான இது தொடர்ந்து 1984 முதல் 1987 வரை நடைபெற்றது.*

*குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் மாவட்ட அளவில் திட்டக்குழு அமைக்கப்பட்டது.*

இதில் மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அரசு அதிகாரிகளும், மாவட்டத்திலுள்ள திறமையான விவசாயிகளும் பெரியோர்களும் இருந்தனர். குட்டிதின்னி என்ற இந்திராநகரிலும் தனியாகத் திட்டக்குழு செயல்பட்டது.

இந்தப் பணிகளை ஆய்வு செய்த மத்திய அரசு, குன்றக்குடி அடிகளாருக்கு விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு.கே.எம்.நடராஜன் பல்வேறு கூட்டங்களில் பேசினார். கண்டாங்கிபட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் சர்வோதயத் தலைவர் திரு. ஜெகந்நாதன், சுவாமி வித்யானந்த சரஸ்வதி மற்றும் திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மதுவிலக்குப் போராட்டம்**

சிவகங்கையில் மதுவிலக்கிற்காக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு சர்வோதயத் தலைவர் திரு.வீ.செல்வராஜ், தமிழ்நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு.கே.எம்.நடராஜன், மாவட்ட முன்னாள் தலைவர் தியாகி அரு.சதாசிவம், தியாகி மணி, தியாகி மாணிக்கம் பிள்ளை, சிவகங்கை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த திரு.பாப்பாதுரை, தியாகி இப்ராஹிம், திரு.இராமானுஜ நாயுடு, மேலும் பல தியாகிகளும் அதிக எண்ணிக்கையில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திற்கு நான் கன்வீனராக இருந்தேன்.

அதன் பிறகு தமிழ்நாடு சர்வோதய சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆச்சார்ய வினோபாஜியின் சீடர் திரு.பால்விஜய் அவர்களின் வாகன யாத்திரை பிரச்சாரம் தமிழ்நாடு முழுதும் நடைபெற்றது. அந்த யாத்திரை சிவகங்கை மாவட்டத்திற்கு வரும்பொழுது, மாவட்ட சர்வோதய மண்டல் செயலாளர் என்ற பொறுப்பில் இருந்தேன். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் செய்வதற்கும் சிவகங்கை நகரில் மாபெரும் பொது கூட்டம் ஏற்பாடு செய்வதற்கும் காரணமாக இருந்தேன்.

மக்கள் மதுவிலக்கு இயக்கத்தின் தலைவர் திரு.ஜெகந்நாதன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெற்றன.

திருவல்லிக்கேணி சாராயக்கடையின் முன்பாக மக்கள் மதுவிலக்கு இயக்கத்தின் சார்பாக திரு.ஜெகந்நாதன் தலைமையில் முதல்நாள் மறியல் போராட்டம் நடைபெற்றது. அதில் 170 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மறுநாள் 22 நபர்களுடன் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்னைக்குச் சென்றோம். கன்வீனர் திரு.மாரியப்பன் ஏற்பாடு செய்திருந்தார். நான் தலைமை தாங்கினேன். 13 பேர் கைது செய்யப்பட்டோம். இந்தப் போராட்டம் இரண்டு மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் நேரில் வந்து சந்தித்தனர்.

மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை விடுதலை செய்திட அவர்கள் கோரிக்கை விடுத்தனர். மதுவிலக்கை ரத்து செய்வதற்காக போராட்டம் நடந்தது. திரு. குமரி அனந்தன், திரு. ஜெகந்நாதன் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள் உள்பட 900 பேர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள எல்லா மடங்களும், மதுவிலக்குப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரின. குறிப்பாக காஞ்சி மடத்தின் பீடாதிபதி, கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லையென்றால் காஞ்சிமடமும் போராட்டத்தில் ஈடுபடும் என்று அறிவித்தார். 'தினமணி', 'கிராமராஜ்யம்' போன்ற இதழ்கள் மதுவிலக்கிற்கு முக்கியத்துவம் அளித்து தலைப்புச் செய்திகள் வெளியிட்டன.

'தினமணி' பத்திரிக்கையின் ஆசிரியர் திரு.ஏ.என்.சிவராமன், கிராம ராஜ்யம் பத்திரிக்கை ஆசிரியர் திரு.வீ.செல்வராஜ் மதுவிலக்கிற்கு ஆதரவாக தலையங்கங்கள் எழுதினர். மற்றவர்களையும் மதுவிலக்கிற்கு ஆதரவாகக் கட்டுரைகள் எழுதும்படி தூண்டினர்.

மக்கள் மதுவிலக்கு இயக்கம் பிரபலமடைந்து உண்மையில் அது மக்கள் இயக்கமாக மாறியது. முகமதிய பெண்கள் அமைப்புகள் மதுரையிலும், சென்னையிலும் யாருடைய தூண்டுதலுமின்றி போராட்டத்தில் பங்கு கொண்டன.

## நீண்ட பாதயாத்திரைகள்

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை திரு.கே.எம்.நடராஜன் தலைமையில் 25 பேர் கொண்ட குழு பாதயாத்திரை தொடங்கியது. மாணிக்கம் அண்ணா தலைமையில் 25 பேர் கலந்து கொண்ட பாதயாத்திரைக் குழு சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை நடந்தனர். அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தங்கி காந்திஜியின் ஆக்கப் பணிகளைப் பிரச்சாரம் செய்தனர். கிராமராஜ்யம் போன்றவற்றைப் பற்றி கருத்தரங்குகள், மாநாடுகள் நடைபெற்றது மிகவும் குறிப்பிடதக்கது. அதில் சிவகங்கை மாவட்ட யாத்திரைப் பொறுப்பாளராக நான் இருந்தேன்.

## ஆட்சி மாற்றம்

சட்ட மன்றத்திற்கு தேர்தல் அறிவிக்கப்பட்டது. செல்வி ஜெயலலிதா முதலமைச்சர் ஆனார். பின்பு சாரயக்கடைகளை மூடவேண்டுமென்று முதல் கையெழுத்திட்டார். மதுவிலக்கு மக்கள் இயக்கம், அரசியல் சார்பின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## பசுப் பாதுகாப்பு இயக்கம்

பசுப் பாதுகாப்பு கன்வீனர் திரு.பொன்னையாவும், மத்தியப் பிரதேசம் தாம் நதிக்கரையிலுள்ள பரந்தாம் வினோபா ஆஸ்ரமத்திலிருந்து திரு.ராதாகிருஷ்ண பஜாஜ் மற்றும் அவர்களது குழுவினரும் தமிழ்நாடு முழுவதும் பசுப் பாதுகாப்பு பற்றி பிரச்சாரம் செய்தனர்.

நான் மாவட்ட கன்வீனராக இருந்தேன். நடந்த இடையமேலூர், பாப்பகுடி, தமராக்கி, திருப்பத்தூர் ஆகிய ஊர்களில் எனது தலைமையில் நடந்த பொதுக்கூட்டங்களில் திரு.ராதாகிருஷ்ண பஜாஜ், திரு.பொன்னையா ஆகியோர் பசுப் பாதுகாப்பு பற்றி பேசினார்கள்.

சிவகங்கையில் அப்போதைய பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு.இ.எம்.சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமுள்ள சர்வோதய ஊழியர்கள் கலந்து கொண்டனர். மாடுகளை அடிமாடுகளாக கேரளாவிற்கு அனுப்புவதைத் தடுப்பது, ஏழை விவசாயிகளுக்கு வங்கிக் கடன் மூலம் பால் மாடுகள் வாங்கிக்கொடுப்பது, பசுவும் கன்றும் வளர்க்கப் பயிற்சி கொடுப்பது, பால், தயிர், மோர், நெய் உற்பத்தி செய்து பால்மாடு வளர்ப்போர்களும் அவர்களது குழந்தைகளும் ஊட்டச்சத்து பெறச் செய்வது, எஞ்சியவற்றை வெளிச்சந்தையில் விற்று பொருளாதாரத்தை உயர்த்துவது போன்றவை திரு. ராதாகிருஷ்ண பஜாஜ் உரையின் சுருக்கம்.

மாடுகளின் சாணங்கள், கோமியங்கள் இவைகளை சேகரித்து நல்ல கம்போஸ்ட் உரம் தயாரிப்பது, கோமியங்களைக் கொண்டு மண்புழு உரம் தயாரிப்பது போன்ற கருத்துக்கள் பேசப்பட்டு விவாதிக்கப்பட்டன.

திரு.ராதாகிருஷ்ண பஜாஜ் மற்றும் அவர்களது மனைவி உள்பட 25 பேர் கொண்ட குழு வந்திருந்தது. சிவகங்கை மற்றும் திருப்புவன வட்டாரப் பகுதிகளில் பசுப் பாதுகாப்பிற்காக தனியாக குழுக்கள் அமைக்கப்பட்டன. பூமிதான வாரியத்தின் தலைவர் சுவாமி வித்யானந்த சரஸ்வதி பரிந்துரையின் அடிப்படையில் திருப்புவனம் மற்றும் சிவகங்கைப் பகுதிகளில் உள்ள 15 கிராமங்களில் பூமிதான நிலங்கள் பெற்ற வாரிசுதாரர்கள் 45 பேருக்கு கடன் வாங்கி பால்மாடுகளும், உழவு மாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாநில அளவில் சர்வோதயத் தலைவர் திரு.ஜெகந்நாதன் வழிகாட்டுதலின்படி அடிமாட்டுக்கு மாடுகள் செல்வதைத் தடுப்பதென்றும், கேரளாவிற்குச் செல்லக் கூடிய மாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழ்நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு. கே.எம். நடராஜன் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய இடங்களில் முகாமிட்டு ஏற்பாடு செய்தார்.

திரு.வரதன் மதுரை மாவட்டத்திற்குக் கன்வீனராக இருந்தார். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு திரு.பொன்னையா கன்வீனராகவும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு சுவாமி வித்யானந்த சரஸ்வதி பொறுப்பாளராகவும் இருந்தனர். எல்லா மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு சர்வோதய மண்டல் மூலம் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஒரு தேதியை நிர்ணயம் செய்து எனது தலைமையில் திருப்புவனத்தில் 25 ஊழியர்களுடன் மறியல் செய்யப்பட்டது. இதற்கு சர்வோதய சங்கத்தாரும், திருப்புவனத்தில் உள்ள காங்கிரஸ்காரர்களும் ஆதரவு அளித்தனர். சந்தையில் இருந்து

லாரியில் அடிமாடுகளை ஏற்றிச்செல்வதைத் தடுத்ததினால், சிவகங்கை காவல்துறை கண்காணிப்பாளர் திரு. காளியாபிள்ளை எங்களைக் கைது செய்து திருப்புவனம் காவல்நிலையத்தில் இரவு 8 மணிவரை வைத்திருந்து பின் விடுதலை செய்தார். இந்த மறியல் போராட்டத்தில் திருப்புவனத்தில் கலந்து கொண்டவர்களை மட்டும் கைது செய்தனர். தமிழ்நாட்டில் வேறெங்கும் இதற்காக எவரும் கைது செய்யப்படவில்லை.

மதுரை காந்தி மியூசியத்தில் திரு.ஜெகந்நாதனும் மற்ற சர்வோதயத் தலைவர்களும் தங்கியிருந்தனர். அவரை இரவு 10 மணிக்கு சந்தித்தேன். அவர் தனது தூக்கம் கலைந்ததைப் பொருட்படுத்தாமல், திருப்புவனத்தில் நடந்தவைகளைப்பற்றி நான் விளக்கியதை உற்சாகத்துடன் இரவு நெடுநேரம் கேட்டுகொண்டிருந்து பின் என்னை மிகவும் பாராட்டினார். அதற்கு முந்தைய ஆண்டுதான் திரு.ஜெகந்நாதன் அவர்களுக்கு பஜாஜ் விருது வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தனியாக பசுப் பாதுகாப்பு மாநாடு நடத்திட திரு.ஜெகந்நாதன் விரும்பினார். தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் தலைவராக திரு.வீ.செல்வராஜ் இருந்ததால் எல்லோரும் கூடிப்பேசி சர்வோதய மாநாட்டை அருப்புக்கோட்டையில் நடத்துவதெனத் தீர்மானித்து அங்கு நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக பாதுகாப்பு இல்லம் அமைக்கப்பட்டது.

## பொருளாதாரப் பணிகள்

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் தொகை முறையாக திருப்பிச் செலுத்தி வந்ததால் அடிக்கடி கடன் வழங்கப்பட்டது. ஆடுவளர்ப்பு மற்றும் மாடுகள் பராமரிப்புக்காக கால்நடை பராமரிப்புத் துறையுடன் பெரிய அளவில் கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.



இதையடுத்து சிவகங்கை வட்டாரத்தில் வாரத்திற்கு ஒருமுறை கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடவும், சிகிச்சையளிக்கவும் 120 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கால்நடை ஊக்குநர்களாக 25 பேர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.250 வழங்கப்பட்டது. இரண்டு பஞ்சாயத்துகளுக்கு ஒரு அனிமேட்டர் நியமிக்கப்பட்டார். கால்நடைகளுக்கு அவசரகால சிகிச்சைகளும், மருந்துகளும், முதலுதவி சிகிச்சை மருந்துகளும் கால்நடை உதவி மருத்துவரின் உதவியுடன் முறைப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு 30 பஞ்சாயத்துக்களிலுள்ள பயன்தாரர்களுக்கு பால்மாட்டுக் கடன், ஆடு வளர்ப்புக் கடன் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டது.

**பால் விற்பனை**

*பால் விற்பனை செய்ய காரைக்குடி ஆவினுடன் தொடர்பு கொண்டோம். சிவகங்கை மாவட்டத்தில் பால் உற்பத்திக்கு மட்டும் கண்டாங்கிபட்டி,சிவல்பட்டி பஞ்சாயத்துக்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்கப்பட்டது.*

*சிவல்பட்டி சங்கம் முதலில் தொடங்கப்பட்ட பெண்கள் கூட்டுறவுச் சங்கம். ஆடு, மாடு வளர்ப்பதற்கு பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இதுவரை சிவல்பட்டி சங்கம் பால் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வருகிறது.*

**சர்வ சேவாப் பண்ணை**

*சர்வ சேவாப் பண்ணையில் கௌரவ ஊழியராகப் பணியாற்றினேன். அப்போது கால்நடை வளர்ப்பு, விவசாயம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏழைக் குடியானவர்களின் வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*கால்நடை வளர்ப்பு மற்றும் ஆடு வளர்ப்புகளில் சிறந்த பயிற்சி பெற்றிருந்ததால் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், பயன்தாரர்களைத் தேர்வு செய்து இறுதி முடிவு எடுப்பதற்குமான தலைமைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராம அளவில் கிராம சபைகள் அமைத்து அதன் மூலம் பயன்தாரர்கள் தேர்வு செய்வது வழக்கத்திலிருந்தது. அந்தப் பயன்தாரர்கள், நவீன கால்நடை வளர்ப்பு, மாற்று விவசாயப் பணிகள் ஆகியவற்றையும் புதிய உத்வேகத்துடன் செயல்படத் தகுதியானவர்களா என்பனவற்றை ஆராய்ந்து அவர்களைத் தேர்வு செய்வதில் இறுதி முடிவு எடுக்கும் நிலையில் இருந்தேன்.*

*ஓசூர் வட்டார கால்நடைப் பண்ணை தமிழ்நாட்டில் ஒரு பெரிய பண்ணையாகும். சிந்து, ஜெர்ஸி, பிரிசின் போன்ற மாடுகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, புரோசின் செமன் (உறைவிந்து) தயாரிக்கும் மிகப்பெரிய நிலையமொன்று அங்கு செயல்பட்டது. அந்தக் கால்நடைப் பண்ணை பல சிறப்புக்களை உடையது. ஆடு மாடுகள், கோழிகள், குதிரைகள் ஆராயச்சிக்காகவும், பயன்தாரர்கள் பயிற்சிக்காகவும் வளர்க்கப்பட்டன. இது 2000 ஏக்கருக்கு மேல் பரப்பளவுள்ளது. பண்ணையில் தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவியாளர்கள் வந்து தங்கிப் பயிற்சிபெறவும், ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் வசதியான கட்டிடங்களும் பயிற்சிக் கூடங்களும் இருந்தன. இந்தக் கால்நடைப் பண்ணையில், சிவகங்கை வட்டாரப் பகுதிகளிலிருந்து அசேபாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 65 பயனாளிகள் 3 நாள்கள் தங்கி பயிற்சி பெற்றனர்.*

**பெங்களூர் பயணம்**

*பெங்களூருக்கு அருகில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான அஷர்கட்டா ஆராய்ச்சி நிலையத்தில், ஒவ்வொரு கால்நடை இனத்திற்கும் துறைவாரியாக இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. இந்த ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட 25 விவசாயிகளை அழைத்துச் சென்றேன். அங்கு என்பது*

நவீன முறையில் கொட்டகைகள் அமைத்து பால்மாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு உத்திகள் தனித்தனியாக நடைபெற்றன. கன்று ஈனும் போது கவனித்தல், கன்றுக்குட்டியை வளர்த்தல், பால் எவ்வாறு கறக்க வேண்டும் என்பதை கருவி முறையிலும் சாதாரண முறையிலும் வேறுபடுத்திக் காண்பித்தல், தீவனங்களை அளந்து முறையாக மதிப்பீடு செய்து தகுந்த நேரத்திற்கு தீவனம் கொடுத்தல், தீவனப்புல் உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் அங்கு நடைபெற்றன. பால் மாடு வளர்ப்பு தனியாகவும், கன்று வளர்ப்பு தனியாகவும், கிடாரிகள் தனியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டு பிரிக்கப்பட்டிருந்தன. பத்துக்கும் மேற்பட்ட வெவ்வேறு கால்நடை இனங்கள் ஆராய்ச்சிக்காக வளர்க்கப்பட்டன. பசுந்தீவன உற்பத்திக்கென்று தனியாக ஒரு இயக்குநர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## செட்டிநாடு கால்நடை வளர்ப்புப் பண்ணை

இது சிவகங்கை மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேலான பரப்பளவில் அமைந்துள்ளது. 45 பயனாளிகளை இங்கு அழைத்துச் சென்றேன். மேற்படி பண்ணையின் பெரும் பகுதி செட்டிநாடு அரசரால் வழங்கப்பட்டது. அங்கே விமானம் இயக்குவதற்கான பாதைகளும், ரோடுகளும் உள்ளன. 1966-67ஆம் ஆண்டில் மத்திய அரசு கால்நடை ஆராய்ச்சி நிலையமாக இதை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இடையில் நின்றுவிட்டது. ஆனால் அதற்குரிய கட்டிட வசதிகள் இருக்கின்றன. பண்ணையில் பால் மாடுகள், ஆடு இனங்களான, ஜமுனப்பாரியின ஆடு, கீழக்கரிசல் இன ஆடு, மெட்ராஸ் ரெட் இன ஆடு, ராம்நாட் ஒயிட், திருச்சி ப்ளாக் ஆகிய இன செம்மறி ஆடுகளும், வெள்ளைப்பன்றிகளும் சீரிய முறையில் வளர்க்கப்பட்டன.

இப்பண்ணையில் துணை இயக்குனர் தலைமையில் ஒரு அலுவலகம், மூன்று கால் நடை மருத்துவர்கள், தீவனப்புல் வளர்ப்புக்காக B.Sc. Agri படித்த விவசாய அலுவலர், கால்நடைகளுக்கு அவ்வப்போது சிகிச்சையளிக்க ஒரு கால்நடை மருத்துவமனை என சிறப்புடன் செயல்படுகிறது.

விவசாயிகளும், கால்நடை உதவி மருத்துவர்களும் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செய்யப் போதுமான வசதிகள் உள்ளன. மேற்படி பண்ணை நிலம் நல்ல செம்மண்ணாக இருப்பதால் தீவனப்புல் உற்பத்தி செய்யத் தகுந்த இடமாக உள்ளது. சிவகங்கை, காரைக்குடி, தேவகோட்டை, திருப்பத்தூர், மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம், திருவாடானை, சிங்கம்புணரி ஆகிய தாலுக்காக்களில் புல் உற்பத்தி செய்வதற்கான நாற்றங்கால் நிலமாக இந்தப் பண்ணை செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சிவகங்கை பகுதியில் 45 பயன்தாரர்களுக்கு 2 நாள் பயிற்சியளிக்கப்பட்டதுடன் அதற்கான பயிற்சிக் கையேடுகளையும் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

## புதுக்கோட்டை கால்நடைப் பண்ணை

புதுக்கோட்டை கால்நடைப் பண்ணை 2500 ஏக்கருக்கு மேல் பரப்பளவுள்ளது. இங்கு 47 பயனாளிகளை அழைத்துச்சென்றேன். இப்பண்ணை இணை இயக்குநரை

*கண்காணிப்பாளராகக் கொண்டு செயல்பட்டு வந்தது. இதுவும் இயற்கை மண் வளம் கொண்ட பூமியாகும். அதிகமான மரங்களும், தேவைக்கேற்ற கால்நடை வசதிகளும் பண்ணைக்குள் இருந்தன. இது ஆடுவளர்ப்பை முக்கியமானதாகக் கொண்ட பண்ணையாகும். புதுக்கோட்டை பண்ணையில் பல்வேறு கால்நடை இனங்கள் வளர்க்கப்படுகின்றன. புதுக்கோட்டை நகருக்குள் பால் மாடுகளுக் கொண்டு தனியாக ஒரு பால்பண்ணை செயல்பட்டு வருகிறது.*

*பண்ணையில் கறவை மாடுகள் அதிகளவு இருந்ததால் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு நகருக்குள் விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகளின் பயிற்சிக்காக பயிற்சிக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பண்ணையின் நோக்கம், இந்தப் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை சம்பந்தப்பட்ட பயிற்சிகள் கொடுப்பதும் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்துவதுமாகும். மேலும் கால்நடை மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க தகுந்த ஏற்பாடுகளும் வசதிகளும் இருந்தன. புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கால்நடை வளர்ப்பு பற்றித் தெரிந்து கொள்வதற்கும், பயிற்சி பெறுவதற்கும் சிறந்த நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. குதிரையைத் தவிர எல்லாக் கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. கோழி இனங்களும் இங்கு உள்ளன.*

## திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டி பால் பண்ணை

*பால்மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்புடன் புரோசின் செமன் (உறை விந்து), எருமை, ஜெர்ஸி கலப்பினம் உறை விந்துகள் இங்கு தயாரிக்கப்பட்டு மாநிலம் முழுவதிலுமுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுவதுடன் தனியாருக்கும் விற்கப்படுகின்றன. இங்குள்ள உறைவிந்து நிலையத்தின் ஆராய்ச்சிக்கான கருவிகள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து வாங்கப்பட்டவை. இந்த நிலையத்திற்கு 60 பயன்தாரர்கள் அழைத்துச்செல்லப்பட்டு 2 நாள் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் சிவகங்கை வட்டாரத்திலுள்ள 120 பயன்தாரர்களுக்கு கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது சம்பந்தமாக ஒரு வாரம் பயிற்சியளிக்கப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறையின் ஆலோசனைப்படி பயிற்சி பெற்றவர்களில் 25 பேர் கால்நடை ஊக்குனர்களாக நியமிக்கப்பட்டு* (A.H.Animators) *ஒவ்வொருவருக்கும் மதிப்பூதியம் ரூ.250 வழங்கப்பட்டது. கால்நடை முதலுதவி மருந்துகள்* (First Aid Medicines), *சிகிச்சைக்கான ஊசி மருந்துகள், அவசரத்தேவை மருந்துகள் அவர்களிடம் கொடுக்கப்பட்டன. இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு ஒரு ஊக்குநர்கள் வீதம் சிவகங்கை வட்டாரத்தில் நியமிக்கப்பட்டனர். கால்நடைகளுக்கு வேண்டிய முதலுதவிகளை ஊக்குநர் செய்யவும், கால்நடைகளுக்கான சிகிச்சையை உதவி மருத்துவர்களைக் கொண்டு செய்யவும், வரைமுறைப்படுத்தப்பட்டது. சிவகங்கை வட்டாரத்திலுள்ள 30 பஞ்சாயத்துகளில் பால் மாடு வளர்ப்புக் கடன், ஆடு வளர்ப்புக் கடன் ஆகியவை கொடுக்கப்பட்டு விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்கத் திட்டமிடப்பட்டது.*

## கிராமதான நிர்மாணச் சங்கம்



*கிராமதான நிர்மாணச் சங்கம் 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பொதுச் செயலாளர் தலைமை நிர்வாகியாவார். பொதுச் செயலாளராக நான் இருந்தேன். தமராக்கி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள 70 குடும்பங்களுக்கு மத்திய அரசின் கபார்டு மூலம் இடையமேலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடனுதவி பெறப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோருக்கான இக்கடன் ஒரு நபருக்கு ஒரு மாட்டிற்கு ரூ.7000 வீதம் இரண்டு பால் மாடுகளுக்கு ரூ.14000 வழங்கப்பட்டது. இதில் 50% தாழ்த்தப்பட்டோரும், 33% பிற்படுத்தப்பட்டோரும் பயன்பெற்றனர். இந்தக் கடன் தொகை வங்கியில் முறைப்படி திருப்பிச் செலுத்தப்பட்டதால் தொடர் கடன் கொடுத்து 150 குடும்பங்கள் இன்றளவும் மகளிர் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. ஆரம்பம் முதலே பால் அனைத்தும் காரைக்குடி ஆவினுக்கு விற்பனை செய்யப்பட்டு, பாலிற்குரிய பணம் நேரடியாக வங்கிக்கு வருவதால், வங்கி தொடர்ந்து கடன் வழங்கி வருகிறது.*

*இந்தப் பால் பண்ணைத் திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் தமராக்கியில் கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது. மாட்டுச்சாணம் மூலம் விவசாய உற்பத்தியும், புல் வளர்ப்பும் பெருகி வருவதால் நாள் ஒன்றுக்கு 500 லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் பயன்பெறும் விவசாயிகள் வீடுகள் கட்டிக்கொண்டும், நிலங்களை வாங்கியும், குழந்தைகளைப் படிக்கவைத்தும், பொருளாதாரத்தில் நன்கு முன்னேறியிருக்கிறார்கள்.*

## இத்தாலி தனி நபர் உதவி *(Compressed Earth Block)*



*வேகவைக்காத செங்கலை உற்பத்தி செய்ய, பாண்டிச்சேரி ஆரோவில் ஆராய்ச்சி நிலையத்தில் அதன் நிர்வாகி சர்ப்பிரேம் என்ற இஞ்சினியரிடம் 15 நாட்கள் பயிற்சி பெற்றேன். மணல், செம்மண், கிராவல் செம்மண், சிமெண்ட் 5% சேர்த்து உரிய அச்சில் அழுத்தம் கொடுத்தால் கம்ப்ரஸ்டு எர்த் ப்ளாக் செங்கல் வந்து விடும். இந்த செங்கலை முதல் 2 நாட்களுக்கு காற்றுப் போகாமல் மூடி வைக்கவேண்டும். அதன் பிறகு கொட்டகை அமைத்து 21*



நாட்களுக்கு பூவாளி மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும். இந்தச் செங்கல் அதிக பலமுள்ளது. தண்ணீரில் கரையாது. சுடாத செங்கலாக இருப்பதால் காடுகளின் அழிவைத் தவிர்க்கலாம். இதில் கட்டப்படும் வீடுகளும் குளிர்ச்சியாக இருப்பதால் நோயாளிகள் தங்குவதற்கும் ஏதுவாக இருக்கும். இந்தச் செங்கலைப் பரிசோதித்துப் பார்த்து, மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம் இஞ்சினியர்கள் அடிக்கடி பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்கள். அவர்களும் இது போன்று கம்ப்ரஸ்டு எர்த் ப்ளாக் வைத்திருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் செங்கல் வயர்பிரிக் ஆகும். இந்தச் செங்கலுக்கு பூச்சு தேவையில்லை. சூலையில் வைக்கும் செங்கலை விட விலை குறைவு. பல்வேறு சிறப்புகள் உடையது. மதுரை சிவகங்கை ரோட்டில் உள்ள பூங்குடில் என்ற முதியோர் இல்லத்தில் நோயாளிகள் தங்கும் ஓய்வறை இச்செங்கற்களால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மதுரையில் உள்ள தான் பவுண்டேஷன் என்னும் தொண்டு நிறுவன அலுவலக கட்டுமானத்திற்காக கட்டுவதற்காக இச்செங்கல் விற்கப்பட்டது. எங்கள் கிராமதான நிர்மாண சங்கம் மூலம் மண்புழு உரத்தொட்டி கட்டுவதற்கும் இந்தச் செங்கல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செங்கலை கிராம மக்களும் கட்டிடம் கட்ட விரும்பி வாங்கி வருகின்றனர்.

### மண்புழு உரம் தயாரிப்பு

கபார்ட் ஹைதராபாத் நிதியுதவியில் 100 பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில், மதுரை மாவட்டம் கோட்டநத்தம்பட்டி மற்றும் அம்பலகாரன்பட்டி பஞ்சயாத்துக்களில் மண்புழு உரம் தயாரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 20 அடி நீளம், 3 ½ அடி அகலம், 2 ½ அடி உயரம் கொண்ட மண்புழு உரத் தொட்டி ஒவ்வொரு பயன்தாரருக்கும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான சாணங்கள், இலைதழைகள் மண்புழு சாப்பிடும் அளவிற்கு தயார்செய்யப்பட்டு 3 ஆண்டுகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. மண்புழு உர உற்பத்தியின் மூலம் இந்த 2 பஞ்சாயத்துக்களில் காய்கறி உற்பத்திகள், பூக்கள், நெல்வகைகள், கரும்பு, வாழை, இதர விவசாயங்கள் ரசாயன உரத்தை நீக்கி இயற்கை மண்புழு உரமாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதை ஆய்வு செய்யவந்த கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரா







குழுவினர், கபார்ட் நிதியுதவியில் இந்தத் திட்டத்தை இது போன்று யாரும் செய்ததில்லை என்று பார்வையாளர்கள் புத்தகத்தில் பாராட்டி எழுதியுள்ளார்கள். மேலும் இத்திட்டம் முழுமையான பிறகு, காந்திகிராம அறக்கட்டளையைச் சேர்ந்த விவசாய அதிகாரி பார்வையிட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறது என்று பார்வையாளர்கள் புத்தகத்தில் குறிப்பிட்டதுடன், அரசிற்கும் பரிந்துரை செய்துள்ளார். தமராக்கியில் பயன்தாரர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு மாதிரி பயிற்சி மையம் இருந்தது. அதனை அப்போதைய மாவட்ட ஆட்சியர் திரு.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார்.

## கபார்ட் ஹைதராபாத் நிதியுதவி - வேலிக்கருவேலை மரங்களை அழிப்பதின் மூலம் நிலத்தடி நீரைப் பாதுகாப்பது, பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவது



இலுப்பக்குடி, கிளாதரி ஆகிய பஞ்சாயத்துகளில் மானாவரி நிலங்கள் மிக அதிகமாக இருந்தது. இந்த நிலங்களில் இருந்த வேலிக்கருவேல மரங்களை வெட்டி கரிமூட்டம் போடுவதற்கும் விற்பனை செய்யவும் 50 பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. வேலிக்கருவேல மரங்கள் குறைந்தது 25 அடி ஆழத்திற்கு நிலத்தடி நீரை உறிஞ்சிவிடும். இப்பகுதிகளில் பருவ மழை அறவே இருக்காது. ஆகையால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயம் பாதிக்கப்பட்டன. இதனால் இதை அழிப்பதற்கான திட்டம் குறித்து மத்திய அரசின் கபார்ட் ஹைதராபாத் நிறுவனத்திற்கு எழுதி அதன் மூலம் தொடர்ந்து இத்திட்டம் 3 ஆண்டுகள் வரை நன்கு செயல்பட்டது. இதன் மூலம் 150 பெண்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு கிடைத்தது. மூன்று ஆண்டுகளுக்குப்பின் பருவ மழை முறையாக பெய்யத் தொடங்கியதனால் விவசாய உற்பத்தியும் பெருகியது; விவசாயக் கூலிகளுக்கும் வேலை கிடைத்தது. 3000 ஏக்கர் அளவில் உள்ள வேலிக்கருவேல மரங்கள் அழிக்கப்பட்டன.

கபார்ட் ஹைதராபாத் நிதியுதவி

## ரெக்ஸின் மற்றும் சணல் பை தயாரிப்பு




ரெக்ஸின் மற்றும் சணல் பை தயாரிப்பதற்கும் தயாரித்த பொருளை விற்பனை செய்வதற்கும் மேலப்பூங்குடி பஞ்சாயத்தில் உள்ள 50 பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இதை மாவட்ட லீட் பேங்க் அலுவலர்கள் குழு பாராட்டியதுடன், அவர்கள்

ஆலோசனைப்படி சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தகுதியுள்ள 35 நபர்களுக்கு தலா ரூ.12,000 வீதம் வங்கிக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டது. இதை ஆய்வு செய்த காந்திகிராம அறக்கட்டளைக் குழுவினர் பாராட்டுத் தெரிவித்தனர்.

நபார்ட் நிதியுதவி – மதுரை மாவட்டம்

**பனை ஓலை தயாரிப்பு**



மதுரை மாவட்டம் அம்பலகாரன்பட்டியில், பனை மரத்தில் கிடைக்கும் பனை ஓலை நார், குருத்தோலை, சாரோலை, நார் மட்டைகள், இவற்றைப் பக்குவப்படுத்தி ஓலைப் பெட்டிகள் மற்றும் பல்வேறு பொருள்கள் தயார் செய்யவும், தயார் செய்த பொருள்களை விற்பனை செய்யவும் 50 பெண்களுக்கு 3 மாத காலம் பயிற்சியளிக்கப்பட்டது. மேலூர் பாரத ஸ்டேட் வங்கி, யூகோ வங்கி சுய உதவிக்குழுக்களாக அவர்களை மாற்றி கடன் வழங்கியது.

**கிராமதான நிர்மாணச் சங்கம்**

இயற்கை விவசாயம் சம்பந்தமாக விவசாயிகளுக்கு பயிற்சி கொடுப்பதற்கு, மின்சார மோட்டார் கிணறுடன் 7 ஏக்கர் நிலம் 5 ஆண்டுகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு அங்கு நெல், கரும்பு பயிரிடப்பட்டன.

**நெல் விவசாயம் – நெல் ரகம் கோ43 :** இந்த நெல்லை உற்பத்தி செய்ய நாற்றங்கால் அமைப்பதிலிருந்து அறுவடை செய்வதுவரை விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் கூடம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு எப்போது வேண்டுமானாலும் விவசாயிகள் பயிற்சி எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மண்புழு உரம் தயார் செய்வது, பஞ்ச காவ்யம் தயார் செய்வது, அமிர்த கரைசல் தயார் செய்வது போன்ற பணிகளும் நடைபெற்றன.

இங்கு உற்பத்தியாகும் நெல் சுய தேவைப் பூர்த்தி மற்றும் அருகில் உள்ள விவசாயிகளுக்கு கொடுத்தது போக மீதமனைத்தும் திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமம் அறக்கட்டளைக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர். இந்தப் பணிகள் அனைத்தையும் கிராமதான நிர்மாண சங்கமே செய்தது.

**கரும்பு விவசாயம் – மஞ்சுளா கரும்பு :** இந்த விவசாயம் செய்ய, கரும்பு நடுவதிலிருந்து அறுவடை வரைக்கும் 8 மாத காலமாகும். சர்க்கரை ஆலைக்கு அறுவடை செய்பவர்களுக்கு 13 மாத காலம் ஆகும். நடுவதிலிருந்து அறுவடை செய்யும் வரை தொடர்ந்து பயிற்சி நடக்கும்.

இங்கு உற்பத்தியாகும் கரும்பு அனைத்தும் திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமம் அறக்கட்டளைக்கு விற்பனை செய்யப்பட்டது. இதில் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெற்றனர். இந்தப் பணிகள் அனைத்தையும் கிராமதான நிர்மாண சங்கமே செய்தது.

இந்தக் கரும்பை அறுவடை செய்தபின் ரசாயனம் இல்லாமல் இயற்கை முறையில் சுண்ணாம்பு சேர்த்து, வெல்லம் காய்ச்சி கரும்பாலைக் கொட்டகை அமைத்து தயார் செய்யபட்ட வெல்லம் அனைத்தும் சுய தேவைப் பூர்த்தி போக அனைத்து வெல்லமும் திண்டுக்கல் காந்திகிராம அறக்கட்டளையில் உள்ள சித்த வைத்திய மருந்து தயாரிக்கும் பிரிவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

## சித்த மருத்துவம் – ரோகிணி ஹெர்பல்

அலோபதி வைத்தியத்தின் மூலம் சிவகங்கை வட்டார விவசாய கூலிகளுக்கு பெரும் செலவு ஏற்பட்டதாலும், எல்லாக் கிராமங்களிலும் போதுமான அளவுக்கு வைத்திய வசதி இல்லாததாலும், சித்த மருத்துவ முறை அறிய 10 மற்றும் 12ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு சித்த மருத்துவர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. சுய உதவிக் குழுக்களின் நிதியில் ரோகிணி ஹெர்பல் மருந்து வாங்கி 32 கிராமங்களில் வைத்திய உதவி செய்யப்பட்டது. இந்தத் திட்டம் தொடர் திட்டமாக செயல்படுகிறது. இந்த ஏற்பாடுகளை கிராமதான நிர்மாண சங்கம் செய்தது.

கபார்ட் ஹைதராபாத் நிறுவனத்தின்

## எரிபொருள் சிக்கனத்துடன் கூடிய நவீன மயானம்

**திட்ட விளக்கம்:** மனித வாழ்வியல் அமைப்பு முறையில் பிறப்பும் இறப்பும் அவ்வப்போது நடைபெற்று வரும் நிகழ்வுகளாகும். பிறப்புக்களை குறைத்துக் கொள்ளவோ, தள்ளிப்போடவோ, கட்டுப்படுத்தவோ வாய்ப்பு உண்டு.



ஆனால் இறப்பு விசயத்தில் எந்த மாற்றமும் செய்து தவிர்த்துக் கொள்ள இயலாது. இது இயற்கையின் நியதியாகும்.

அதற்கான ஈமச்சடங்குகள் மதம், இனம், கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்களுக்கேற்ப சிறிதளவு வேறுபட்டாலும்கூட இன்றைய காலக்கட்டத்தில் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு தவிர்க்க இயலாத பெரிய சுமையை ஏற்படுத்துகிறது.

சமீப காலத்திய உத்தேச கணக்கீட்டின்படி ஒரு சடலத்தை எரியூட்ட சுமார் 400 – 600 கிலோ வீதம் ஆண்டு ஒன்றுக்கு 5,00,000-டன் அதாவது ரூ.500 கோடி மதிப்புள்ள

*உலர்ந்த விறகு நமது நாட்டிற்கு தேவைப்படுகிறது. இது இயற்கை வளத்தை அழிக்கும் சமூகக் கேடாகவும் அமைகிறது.*

*நாட்டின் இயற்கை வளத்தைக் காத்து, நடுத்தர, ஏழை மக்களின் செலவுச் சுமையைக் குறைக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டதே எரிபொருள் சிக்கன, நவீன மயானம் அமைத்தல் திட்டமாகும்.*

## அமைப்பு முறை

*7 அடி நீளத்தில் 3 அடி இடைவெளியில் காற்றுப் புகும் இடைவெளிகளுடன் கூடிய இரண்டு சுவர்கள் கட்டுதல்.*

*தரையிலிருந்து 1 ½ அடி உயரத்தில் உறுதியான இரும்புக் கிராதி (படல்), அசைவு ஏற்படாதவாறு அமைத்துக் கொள்ளல்.*

*இரும்புக் கிராதியின் மேல் சிறிது விறகு பரப்பி சடலத்தை வைத்து குறைந்த அளவு எரிபொருளைக் கொண்டு எரியூட்டிக் கொள்ளலாம்.*

*சுவரின் பக்கவாட்டிலும் மற்றும் 3 அடி இடைவெளியிலிருந்தும் வரும் காற்றின் இயற்கை சக்தியில் குறைந்த அளவு எரிபொருளினால் சடலம் நன்றாக எரிந்து சாம்பலாகிவிடுகிறது.*

*மழையால் பாதிக்காதவாறு தகரத்தால் 16 x 16 அடி மேற்கூரையும் தரைமேடையும் அமைக்கப்படும்.*

**பயன்கள்:**

1. *எளிதில் அமைத்து பராமரிக்கக் கூடியது.*
2. *50% எரிபொருள் சேமிக்கப்படுகிறது.*
3. *புரட்டிப் புரட்டி எரிக்க வேண்டியதில்லை.*
4. *விரைவிலும் பரிபூரணமாகவும் ஈமக்கிரியை நடைபெறுகிறது.*
5. *குறைவான எரிபொருள், குறைந்த நேரம் போதுமானதால் சுற்றுப்புறச்சூழல், வனவளம் பெரிதும் காப்பாற்றப்படுகிறது.*
6. *மத, இன, பண்பாட்டுக் கலாச்சராமும் பாதுகாக்கப்பட்டு ஏழை, நடுத்தரக் குடும்பங்களின் நிதிச் சுமையும் குறைக்கப்படுகிறது.*

## மயானக் கொட்டகை அமைக்கப்பட்ட பஞ்சாயத்துகள்

*1. தமராக்கி வடக்கு, 2. தமராக்கி தெற்கு, 3. முடிகண்டம் (பொது), 4. முடிகண்டம் - SC மயானம், 5. காஞ்சிரங்கால், 6. இடையமேலூர் - (பொது), 7. இடையமேலூர், காந்திநகர் காலனி, 8. பிரவலூர், 9. தமராக்கி வடக்கு, கொத்தங்குளம், 10. அரசனூர் (பொது), 11. அரசனூர் - SC காலனி, 12. இலுப்பக்குடி (பொது) ஆகிய பஞ்சாயத்துக்களில் மயானக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளன.*

## சுய உதவிக் குழுக்கள்



சிவகங்கை, திருப்புவனம், காளையார்கோவில் தாலுகாக்களில் நபார்ட் மூலம் 100 பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அமைத்திட நிதி வழங்கப்பட்டது. ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் வங்கிகளிடமிருந்து 3 வருடங்களுக்கு தொடர்ந்து கடன் பெற, கிராமதான நிர்மாண சங்கத்திற்கு பொறுப்பு வழங்கப்பட்டது.

கீழ்க்கண்ட வழிகாட்டுதல் குழு (Monitoring Committe) அமைக்கப்பட்டது.

1. District Manager, நபார்டு
2. District Lead Bank Manager, I.O.B., Sivagangai
3. A.Urumathan, General Secretary, Gramadhana Nirmana Sangam
4. Chief Manager, State Bank of India, Sivagangai
5. Chief Manager, I.O.B., Sivagangai
6. Branch Manager, Bank of India, Sivagangai
7. Branch Manager, UCO Bank, Sivagangai
8. Branch Manager, I.O.B., Idayamelur
9. Branch Manager, Syndicate Bank, Thamarakki

மேற்கண்ட வங்கிகள் 20 பேர் கொண்ட 100 சுய உதவிக்குழுவைச் சேர்ந்த 2000 குடும்பங்களுக்கு, பின்வரும் வகைகளுக்கு கடன் வழங்கின.

1. பால் பண்ணைக் கடன், காய்கறி உற்பத்திக் கடன்.

2. நெல், கடலை, கரும்பு, சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, வாழை இதர விவசாய உற்பத்திக் கடன்.

3. சிறு தொழில் கடன், ஜவுளி வியாபாரம், தையல், ஜுட் மற்றும் ரெக்ஸின் பேக் தயாரிப்பு, மண்புழு உரம் தயாரிப்பு, கரி மூட்டம் தயாரிப்பு, பூ வியாபாரம், கூடை முடைதல், மூங்கில் பொருள்கள் தயாரிப்பு, பனை ஓலைப் பெட்டி, கூடை தயாரிப்பு போன்ற தொழில் கடன்கள் 3 ஆண்டுகள் தொடர்ந்து கடன் வழங்கப்பட்டது. அதனை மேற்காணும் வழிகாட்டுதல் குழுவினர் தொடர்ந்து மூன்று மாதத்திற்கொரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி, திட்ட செயல்பாடுகள் குறித்தும், மேற்படி தொழில்கள் மூலம் அடைந்த பொருளாதார வளர்ச்சி கண்டும் திருப்தி தெரிவித்தனர். இதில் அனைத்து தொழில்களுக்கும் முறையாக பயிற்சி அளிக்கப்பட்டு கடன் வழங்கப்பட்டது.

முதல் கடன், ஒவ்வொரு சுய உதவிக்குழுக்களுக்கும் ரூ.60,000. இரண்டாவது கடன், செயல்பாட்டிற்கு ஏற்றாற்போல ஒரு குழுவிற்கு ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கப்பட்டது.

**உழவர் மன்றங்கள்** (Farmers Club)

நபார்டு நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி சிவகங்கை வட்டாரத்தில் 27 உழவர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு உழவர் மன்றமும் 25 முதல் 30 பேர் கொண்ட குழுவாக செயல்பட்டு வருகிறது.

உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு விவசாயம் சம்பந்தமாக B.Sc., (Agri), M.Sc., (Agri) பட்டம் பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு லாபகரமான முறையில் விவசாயம் செய்வது பற்றி உயர்நிலைப் பயிற்சியளிக்கப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் பற்றிய செய்முறைப் பயிற்சிகள் மதுரை, ஒத்தக்கடை அருகிலுள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் மூலம் எல்லா விவசாயிகளுக்கும் அளிக்கப்படுகிறது.

செட்டிநாடு கால்நடை விவசாயப் பண்ணையிலும் மேற்படி உழவர் மன்றங்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சிகள் அனைத்தும் நபார்டு நிதியுதவியில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டங்கள் அனைத்தையும் கிராமதான நிர்மாண சங்கம் தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்திவருகிறது.

**குடி போதை மாற்று சிகிச்சை மையம்**

2009 ஆகஸ்டு 24-ல் நடைபெற்ற குடும்ப நல ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், குடிபோதை மாற்று சிகிச்சை மையம் அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி 7-10-2009ஆம் தேதி நடைபெற்ற கிராமதான நிர்மாண சங்கக் கூட்டத்தில், 15 படுக்கைகள் கொண்ட குடிபோதை மாற்று சிகிச்சை மையம் அமைக்க விண்ணப்பம் அனுப்ப அதிகாரமளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



சென்னையிலுள்ள சமூகப் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளரின் பரிந்துரையுடன், 2-7-2011-ல் புதுதில்லியிலுள்ள மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார வழங்கல் துறை அமைச்சகத்திற்கு இக்கடிதம் அனுப்பப்பட்டது. அனுமதியும் கிடைத்தது.

ஆனால் 1-4-2009 முதல் இம்மையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதற்கு அரசின் நிதியுதவி 2011-2012-ல்தான் கிடைத்தது. இங்கு மாதத்திற்கு 15 பேர் உள் நோயாளிகளாகவும் 32 பேர் வெளி நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். ஒரு ஆண்டில் உள் நோயாளிகள் 180 பேர், புற நோயாளிகள் 384 பேர் என இதுவரை மொத்தம் உள் நோயாளிகள் 1626 பேரும், வெளிநோயாளிகள் 23,456 பேரும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

எங்கள் மைய டாக்டர் ஆர்.கதிர்மணி அவர்கள், நோயாளிகளைப் பரிவுடனும், அக்கறையுடனும் கவனித்து சிகிச்சையளித்து வருகிறார். அவரது வழிகாட்டுதலின்படி நர்ஸ்கள் மூலம் தக்க நேரத்தில் நோயாளிகளுக்கு மருந்து மாத்திரை வழங்கி அவர்களின் ரத்த அழுத்த அளவு, சர்க்கரைச்சத்து அளவு கண்டறியப்பட்டு வருகிறது. இது தவிர நோயாளிகளுக்கு தனிப்பட்ட முறையிலும், குடும்பத்தினருடனும், குழுவாகவும் அவர்களுக்கான மனநலப் பயிற்சிகள், ஆலோசனைகள் தகுதி வாய்ந்த சமூகப் பணியாளரால் வழங்கப்படு கின்றன. நோயாளிகளுக்கு இலவச தங்குமிடம், மருத்துவ வசதி, யோகா, தியானம் முதலியன தினந்தோறும் நடைபெறுகின்றன. மாதத்திற்கு நான்கு முறை சிவகங்கை மாவட்ட கிராமங்களிலும், நகரங்களிலும் விழிப்புணர்வு முகாம் நடத்தி வருகிறோம். இந்த விழிப்புணர்வு முகாம்களுக்கு டாக்டர் ஆர்.கதிர்மணியுடன் சென்று, குடியினால் ஏற்படும் கடுமையான உடல் பாதிப்புகள், பொருளாதாரச் சிக்கல், குடும்ப உறவுகள் சீர்குலைவு பற்றி வழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். தொடர் கண்காணிப்பின் மூலம் சிகிச்சை பெற்று திரும்பியவர்களின் முன்னேற்றத்தைத் தெரிந்து கொள்கிறோம். தேவைப்பட்டால் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. மறுவாழ்வுக்கும் வழிகாட்டப்படுகின்றன.

எங்களுக்கு அரசுத் துறைகளும், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகமும் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரமும் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி வருகின்றன.

காந்திய சர்வோதய நிறுவனங்களும் எங்களது பணிகளைப் பாராட்டி ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றன. ‘சர்வோதயம் மலர்கிறது’ மாத இதழில் எங்கள் செயல்பாடுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அவர்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடும்ப நல ஆலோசனை மையம்

சிவகங்கை மாவட்டத்தில் பெரும்பாலான கிராம மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். விவசாய வேலை இல்லாத காலங்களில் கூலித் தொழில்; அதுவும் போதுமான கூலி கிடைப்பதில்லை. வீட்டில் வறுமை, பொருளாதார பிரச்சினை, குடும்பத்தில் குழப்பம், தொழில் செய்ய வழிகாட்டுதலின்மை, பெண்களுக்கு எதிரான குடும்பக் கொடுமைகள், வரதட்சணை வன்முறைகள், திருமணத் தள்ளி வைப்பு, இருதார வாழ்க்கை, மாமனார் மாமியார் கெடுபிடிகள் இவைகளினால் ஏழைக் குடும்பப் பெண்கள் துன்பப்படுவதை சிவகங்கை வட்டார அறிந்தோம்.



இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க, 2008-2009ஆம் ஆண்டு

தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை உதவியுடன் குடும்ப நல ஆலோசனை மையம் தொடங்கப்பட்டது. எங்கள் நிறுவன குடும்ப நல ஆலோசகர், குடும்பநல நீதி மன்றங்களுடனும் மாவட்ட மகளிர் நீதி மன்றங்களுடனும் நல்ல தொடர்பு வைத்துள்ளார். மேலும் தாலுகா காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர சமூக அமைப்புகளுடனும் நல்ல தொடர்பு வைத்துள்ளார்.

இதுவரை சராசரியாக மாதத்திற்கு 10 குடும்பத்தினர் வீதம் ஆண்டிற்கு 120 என இதுவரை 1225 குடும்பத்தாரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் வாழ்கிறார்கள். மாதத்திற்கொருமுறை சிறந்த கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்களைக் கொண்டு கிராமங்கள்தோறும் விழிப்புணர்வு முகாம் நடத்துகின்றோம். இதில் கலந்து கொண்ட பொதுமக்கள், கூறப்படும் கருத்துக்களைக் கேட்டு தங்களது குடும்பங்களில் பிரச்சினையின்றியும் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இருக்கும்படி பார்த்துக் கொள்கின்றனர்.

### ராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகம்

இது மத்திய அரசின் சமூகநல வாரியத்தின் நிதியுதவியில் 2-2-2006-ல் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பின்வரும் ஏழு கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன.

1. மேலுச்சாளூர் - சாளூர் பஞ்சாயத்து
2. கீழச்சாளூர் - சாளூர் பஞ்சாயத்து
3. பாப்பாகுடி - சாளூர் பஞ்சாயத்து
4. திருமண்பட்டி - மேலப்பூங்குடி பஞ்சாயத்து
5. உருளி மேற்கு - குடஞ்சாடி பஞ்சாயத்து
6. காயாங்குளம் - குடஞ்சாடி பஞ்சாயத்து
7. இலுப்பகுடி - இலுப்பகுடி பஞ்சாயத்து

ஒவ்வொரு காப்பகத்திலும் கிராமப்புற ஏழைக் கூலிப் பெண்களின் குழந்தைகள் 25 பேர் கல்வி கற்கின்றனர். மொத்தம் 175 குழந்தைகள் இக் காப்பகங்களில் கல்வி கற்றுப் பயன் பெறுகின்றனர்.

குழந்தைகளுக்கு பகல் உணவுடன் முட்டை, பாசிப்பயறு, பால், கொண்டைக் கடலை, சத்தான காய்கறி வகைகள் சமைத்து வழங்கப்படுகிறது.

சங்கத்தின் டாக்டர் கதிர்மணி குழந்தைகளின் உடல்நிலையை அவ்வப்போது பரிசோதித்து வேண்டிய மருந்து மாத்திரைகளை வழங்குகிறார். அக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு சத்தான உணவு உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், அவர்கள் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்று உரிய இடைவெளிகளில் உடல் பரிசோதனை செய்து கொள்ளும்படியும் கூறுவார்.




குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து கொள்ள பெற்றோர் - ஆசிரியர் சங்கக் கூட்டம் மாதந்தோறும் நடைபெறுகிறது. எங்கள் நிறுவன நிர்வாக அலுவலர் இந்தக்கூட்டங்களில் கலந்து கொள்வார்.

மாலை நேரங்களில் குழந்தைகள் திறந்த வெளி மைதானத்தில் விளையாடுவர். வகுப்புகளில் அவர்களுக்கு இதிகாசம் மற்றும் புராணங்களிலிருந்து நீதிநெறியை விளக்கக்கூடிய சிறு சிறு கதைகள் சொல்லப்படும். அவர்கள் ஒழுக்கத்துடனும் நல்ல பண்புகளுடனும் நடந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குழந்தைகள் இரவில் வீட்டுப்பாடங்ளைப் படிக்கவும், எழுதவும் தூண்ட வேண்டுமெனப் பெற்றோர்களிடம் கூறப்படுகிறது.

எங்களது சங்கத்தின் பணிகளைப் பாராட்டி, மேற்குவங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவில் 21-12-2017ஆம் தேதி, மேற்கு வங்க மாநில மேதகு ஆளுநர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட விழாவில், சுவாமி விவேகானந்தா மற்றும் சகோதரி நிவேதிதா பவுண்டேஷன் சார்பில் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பர்மா – சிலோன் அகதிகள் புணர்வாழ்வுத் திட்டம்

## ஓ.புதூர் ஊராட்சி

### A - காலனி, B - காலனி. C - காலனி

**1974-1978**

*பர்மா மற்றும் சிலோன் அகதிகளாக வந்தவர்களுக்கு இந்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் ஒருங்கிணைப்போடு காட்டு நிலங்களை சீர்திருத்தி வீடுகள் கட்டிக் கொடுத்தது. அவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அதைச் சீர்திருத்தம் செய்ய ஓரளவு நிவாரணமும், கடனும் வழங்கப்பட்டன.*

*பர்மா - சிலோன் அகதிகள் அங்கு சௌகரியமாக இருந்தவர்கள். இங்கு அவர்களால் கூலி வேலையோ, விவசாய வேலையோ உடனடியாகச் செய்ய முடியாமல் அன்றாட ஜீவனத்திற்காக அங்குமிங்கும் அலையத் தொடங்கினர்.*

*மூன்று காலனியைச் சேர்ந்தவர்களும் தனித்தனியாக சங்கங்கள் அமைத்துக் கொண்டனர். திரு. E.M.சுதர்சன நாச்சியப்பன் அவர்கள் கௌரவ சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். பல்வேறு வகைகளில் அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஆலோசனைகள் வழங்கினார்.*

*அரசு உதவிகள் முறையாகக் கிடைக்க வழிகாட்டியாக இருந்தார். இந்த மூன்று காலனிகளிலுள்ள சங்கங்களும் துடிப்புடனும், சுறுசுறுப்புடனும் செயல்பட்டன.*

*பொதுச் செயலாளர் திரு. இராமையா மற்றும் முனியாண்டி ஆகியோரின் பெயர்கள் மட்டும் நினைவிலுள்ளது.*

### மக்கள் குழு அமைப்பு

*வறுமையை ஒழிப்பதற்காக மக்கள் குழு அமைக்கப்பட்டது. அதில் மூன்று காலனியைச் சேர்ந்தவர்கள் நிர்வாகிகளாக இருந்தனர். இக்குழுவிற்கு நான் தலைவராக இருந்தேன்.*

*A காலனியிலிருந்து C காலனி வரை புதிய சாலை அமைத்திட டெண்டர் விடப்பட்டு, காண்ட்ராக்டரிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. அந்த மூன்று காலனிகளிலும் ஆரம்பப்பள்ளி கிடையாது. போதிய குடிநீர் வசதியில்லை, சுகாதார வசதி இல்லை. அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய பணம் வரவில்லை. இதனால் மூன்று காலனியைச் சேர்நத பொதுமக்கள் 5 வயது பையன் தலைமையில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து சிவகங்கை நகரில் பேரணி நடத்தினர். அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. A. சுப்பிரமணியன் அவர்கள் சிவகங்கையில் முகாமிட்டு மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்துப் பேசினார். அதனால் உடனடியாக தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டது. நிலுவைத் தொகை மூன்று மாதங்களுக்குள் பட்டுவாடா செய்யப்படுமென உறுதியளித்தார். தண்ணீர் வசதிக்கான கிணறு வெட்ட உத்தரவு பிறப்பித்தார். புதிய சாலைக்கு டெண்டர் உத்தரவிட்டுள்ளதால், பொதுமக்களுக்கு*

வழங்க வேண்டிய தொகை உடனடியாக வழங்க முடியாதெனச் சொன்னார். பின்னர் எங்களது வற்புறுத்தலுக்கிணங்க நான்கில் ஒரு பகுதி காண்ட்ராக்டை ரத்து செய்து, மக்கள் குழுவிற்கு பணம் வழங்கினார்.

மக்கள் குழுவிற்குத் தலைவராக நான் இருந்ததால், எனது பெயரில் காண்ட்ராக்ட் வழங்கப்பட்டது. இப்பணியில் கூலியாட்களை நியமிக்காமல், அந்த அகதிகளே வேலை செய்ய தளவாட சாமான்கள் வாங்கி, அனைவரும் சேர்ந்து தினக்கூலியை நிர்ணயம் செய்து அன்றாடம் பட்டுவாடா செய்யப்பட்டது.

காண்ட்ராக்ட் பில்படி அரசாங்கத்தால் பணம் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு தொகை போனசாக அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் எஞ்சியவற்றை மூன்று சங்கங்களின் நிர்வாகச் செலவுகளுக்கு வழங்கப்பட்டது. இதிலிருந்து காண்ட்ராக்டில் அதிக லாபம் கிடைப்பது தெரிய வந்தது.

பெண்களின் வேலை வாய்ப்பிற்காக, சிவகங்கையிலுள்ள சர்வோதய சங்க நிர்வாகி திரு. ராமசாமியை அணுகினேன். மூன்று காலனி மக்களும் பயன் பெறும் வகையில் தினமும் 50 பெண்கள் வேலை செய்யுமளவிற்கு டெஸ்டூல் இராட்டை பணி தொடங்கப்பட்டது.

# உடனிருந்த பணிகள்! – ஊருக்கான பணிகள் உள்ளம் நிறைந்த பணிகள்

**– சஞ்சய் கணபதி,** Ex. MC.

**முனனாள் தலைவர், சிகவங்கை நகர் காங்கிரஸ்**

*நானும் திரு. அ. உறுமத்தான் அவர்களும் எப்போதும் ஒத்த சிந்தனையும் ஒரே கொள்கையும் கொண்டவர்கள். அவரைப் போன்றே நானும் காந்திய சர்வோதய நிர்மாணப் பணிகளில் நாட்டம் கொண்டவன் என்பது எல்லோரும் அறிந்திருக்கக் கூடிய செய்தியாகும்.*

*திரு. அ. உறுமத்தான் அவர்களும் நானும் ஒரு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெறுகின்ற வாய்ப்பைப் பெறாதவர்கள். ஆனால் பல சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு தினையளவேனும் துணை நின்ற பாக்கியத்தைப் பெற்றவர்கள். அமைச்சர்களோடு உரையாடி அவர்கள் மூலம் பொதுவேலைகளைச் செய்து முடிக்கும் வல்லமை எங்கள் இருவருக்கும் நிறையவே இருந்தது. அந்த வகையில் பல்வேறு பொது வேலைகளில் பங்காற்றினோம்.*

*1977இல் சட்டமன்ற உறுப்பினராக பெரியவர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். அவருடன் இருந்து அவரது பணிகளுக்கு துணை செய்யும் வாய்ப்பு எனக்கும் திரு. அ. உறுமத்தான் அவர்களுக்கும் கிடைத்தது. அவர் எங்களிடம், தொகுதி வளர்ச்சிப் பணிகள் சம்பந்தமாக ஆலோசிக்க, அனைத்துக் கட்சிகள், சங்கங்கள், அமைப்புகள் அடங்கிய கூட்டத்தினை கூட்டச் சொன்னார். அதன்படி, நானும் திரு.அ. உறுமத்தான் அவர்களும் திருவாளர்கள் K. ஜவஹர், V. ரவி, S. செல்வரெங்கன், R. மோகன்ராஜ், K.R. வைத்தியநாதன், M. துரைச்சாமி, P.S.S. நாகேந்திரன், M. தமிழரசன், K. காந்தி, P. கேசவசாமி M.S. அப்பாஸ், M. மாணிக்கம் பிள்ளை, பாப்பாதுரை, C. முத்துராமலிங்கம், கூத்தாண்டன் K.S. இராமசாமி, திரு.பா.மனோகரன் ஆகியோருடன் இணைந்து முக்கியத் தலைவர்கள், வல்லுநர்கள் பங்கு கொண்ட ஆலோசனைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தோம்.*

*அந்தக் கூட்டங்களில் கிராபைட் கனிமத் தொழிற்சாலைக்கான முன்முயற்சி, வைகை பெரியாறு கால்வாய் மேம்பாட்டுத் திட்ட நீட்டிப்பு மூலம் சிவகங்கைப் பகுதிக்கு பாசன வசதி ஏற்படுத்துவது, புதிய சர்க்கரை ஆலை, பஞ்சாலைகள் துவங்க ஏற்பாடுகள் செய்தல், புதிய சாலைகள் அமைக்க, புதிய புறநகர் மற்றும் நகர்ப் பேருந்துகள் விடுவது, குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்துவது, பள்ளி, கல்லூரிகளில் கூடுதல் படிப்புகள் உருவாக்குவது, மகளிர் கல்லூரி துவங்குவது, மருத்துவமனையை விரிவுபடுத்துவது, காளையார் கோவில் NTC பஞ்சாலையில் கூடுதல் தொழிலாளர்களை பணியில் சேர்ப்பது போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது பற்றி விவாதிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முடிவுகள் எடுத்து திட்டங்களைச் செயல்படுத்த, இந்த ஆலோசனைக் கூட்டங்கள் பெரிதும் உதவிகரமாக இருந்தன. இந்த ஆலோசனைக் கூட்டங்களை ஒருங்கிணைத்த நினைவுகள் என்றென்றும் எனக்கும் திரு. அ. உறுமத்தான் அவர்களுக்கும் நீங்காத நினைவாகவும் மன நிறைவாகவும் உள்ளது.*

*இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் மதுரை என்று இருந்ததை மாற்றி சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தலைநகரம் என்று அறிவிக்கப்பட வேண்டும் என்று எழுச்சிப் போராட்டம் நடைபெற்றது. அதில் முக்கியப் பங்குபெறும் வாய்ப்பு எனக்கும் திரு. அ.*

உறுமத்தான் அவர்களுக்கும் கிடைத்தது. மத்திய அமைச்சர் திரு. R.V. சுவாமிநாதன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியன் ஆகியோர் சிவகங்கையைத் தலைநகரமாக அறிவிக்க தமிழக அரசை வலியுறுத்தி முன்னெடுப்பு செய்தபோது, அவர்கள் பணிக்கு சிவகங்கை மக்களும் சர்வகட்சியினரும், பொது அமைப்புகளும் துணை நின்று ஒரே குரலில் கோரிக்கை வைத்து அணி திரண்டனர். தமிழக அரசு இறுதியில் சிவகங்கையை மாவட்டமாகப் பிரித்து சிவகங்கை அதன் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

சிவகங்கை தலைநகர் ஆன பின்பும் பல்வேறு மாவட்ட அலுவலகங்கள் மதுரையிலும், பிற இடங்களிலும் இயங்கி வந்தன. மாவட்ட குற்றவியல் நடுவர் மன்றம் தேவகோட்டையில் இயங்கி வந்தது. அவற்றையெல்லாம் சிவகங்கைக்கு கொண்டுவர தமிழக அரசிடம் கோரிக்கை வைத்து வலிமையான போராட்டம் நடந்தது. அதிலும் வெற்றி கிடைத்தது. இந்தப் போராட்டங்களில் மத்திய அமைச்சர் R.V. சுவாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் திரு.உ.சுப்பிரமணியன் ஆகியோரது ஆதரவுடன், திருவாளர்கள் M. மாணிக்கம் பிள்ளை, M.S. அப்பாஸ், பாப்பாதுரை, M.A.T. அரசு பாண்டித்துரை, பா.மனோகரன், A. முத்து, கேசவசாமி, N.M. முனியப்பன், கடலைகடை பாண்டி, கூனகிருஷ்ணன், அமானுல்லா, முத்துசாமிபாரதி, பாம்பே நாராயணன், க. திருஞானம், A.அழகர்சாமி, A.சாமிநாதன், S.குணசேகரன், V.R. அய்யாத்துரை, முகமது இக்பால், ஜபருல்லா மற்றும் வர்த்தகர்கள், வழக்கறிஞர்கள், அரசு ஊழியர்கள் என அனைவரும் பங்கேற்றனர். இப்போராட்டங்களிலும் அமைச்சரோடும் சட்டமன்ற உறுப்பினரோடும் உடனிருந்து போராட்டங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பாளர்களில் நானும் திரு. அ. உறுமத்தான் அவர்களும் முனைப்போடு அங்கம் வகித்தோம்.

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினராக திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் பதவி ஏற்ற சமயத்தில் தமிழ்நாடு கனிம வள நிறுவனத்தின் சேர்மனாக முனைவர் சரவணன் அவர்கள் இருந்தார். அவர் தமிழகத்தின் மூத்த அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனின் உறவினர். ஜியலாஜிகல் சர்வே ஆப் இந்தியா என்ற புத்தகத்தில் சிவகங்கை பகுதியில் எந்தெந்த இடங்களில் சுண்ணாம்புக் கல், கிரானைட், கிராபைட் போன்ற கனிம வளங்கள் உள்ளன என்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதையும், அதனை யாசின் சிமிண்ட்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் குத்தகைக்கு எடுத்து தனியார் சுரங்கம் தோண்ட திட்டமிடுவதையும், சட்டமன்ற உறுப்பினர் திரு. உ சுப்பிரமணியம் அவர்களிடம் நானும் திரு. அ. உறுமத்தான் அவர்களும் எடுத்துக் கூறினோம். கோமாளிபட்டியில் கிராபைட் சுரங்கம் தோண்டப்பட வேண்டும். அதுவும் அரசு நிறுவனமான TAMIN மூலமாகவே துவங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் சட்டமன்றத்தில் பேசி அப்போதைய முதல்வரிடம் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றார். அதன் பின் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு கிராபைட் சுரங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கிராபைட் படிவம் புதைந்து கிடக்கும் கோமாளிபட்டி பகுதிகளில் சுரங்கத்திற்கான நிலத்தை கையகப்படுத்துவதற்கு அப்பகுதி வாழ் மக்களிடமும் நிலச் சொந்தக்காரர்களிடமும் நன்மைகளை, பயன்களை விளக்கி கூறி நம்பிக்கை ஏற்படுத்தி ஆட்சேபணை ஏதுமின்றி நிலம் கையகப்படுத்தும் பணியில் கூடவே நின்று அரசு நிறுவனத்துக்கு ஒத்துழைப்பு பெற்றுத் தந்தோம். இப்பணியில் இடையமேலூர், நடராசன், K. ஜெகநாதன், தமராக்கி வடக்கு சி.முத்துராமலிங்கம் (வட்டாரத் தலைவர்) எல்.கருப்பையா, P. அம்பலத்தேவர், குமாரபட்டி V.R. அய்யாத்துரை, சோணை, சக்கந்தி இராமையா, மானாகுடி ராஜு, கூத்தாண்டான் இராமசாமி, பாப்பாதுரை, ஜவஹர், செல்வரெங்கன் இன்னும் பலர் பங்கேற்று உதவினார்கள். கிராபைட் சுரங்கம் சிறிய அளவில் தோண்டப்பட்டது. சில ஆண்டுகள் கழித்து மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள்,

பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களை அழைத்து வந்து அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகளிலும் எங்கள் பங்களிப்பு மகிழ்ச்சியானது.

சிவகங்கை கண்ணாரிருப்பில் சர்க்கரை ஆலை அமைக்க S.P. சுகர்ஸ் என்ற பெயரில் NOC பெற்றிருந்த திரு. ஆராவயல் பெரியணன் செட்டியார், சர்க்கரை ஆலை விரைவாக துவங்குவதற்கு உதவிடும் வகையில் கண்ணாரிருப்பு பகுதி விவசாயிகளிடம் இருந்து ஆலைக்கான இடத்தை எடுக்கும் பணியில் உதவி செய்ய துணை நிற்குமாறு சட்டமன்ற உறுப்னர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும், மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. R.V. சுவாமிநாதன் அவர்களும் எங்களைப் பணித்தார்கள். இப்பணியில் கண்ணாரிருப்பு ராமன், இஸ்மாயில், கிருஷ்ணன், ராஜாமணி, பனையூர் D.S. முத்து, தூதை பாலகுரு சேர்வை, பூவந்தி Ex MLA சீமைச்சாமி, அரசனூர் மலைச்சாமி, C. இளங்கோவன், M. பாண்டியன், முருகேசன், முத்துப்பட்டி மாசானம், கரும்பாவூர் செல்லமுத்து சேர்வை, கூத்தாண்டான் இராமசாமி, பாப்பாதுரை, மனோகரன், மாணிக்கம்பிள்ளை, செல்வரெங்கன், ஜவஹர், M. துரைசாமி, நாகேந்திரன் இன்னும் பலரும் ஈடுபட்டார்கள். நிலம் தேவையான அளவு கையகப்படுத்தப்பட்டது. ஆராவயல் பெரியணன் செட்டியார் விபத்தில் காயமடைந்து ஆலை தொடங்குவதை அவர் கைவிட்டதால், காந்தியச் செம்மல் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களின் சக்தி குரூப் நிறுவனம் சார்பில் சக்தி சர்க்கரை ஆலை துவங்கப்பட்டது. திரு. ப. சிதம்பரம் அவர்களும் ஆலை விரைவில் தொடங்க ஆவன செய்தார். அவர்களோடு இந்தப் பணிகளில் துணை நிற்கும் வாய்ப்பும், நில எடுப்புக்கு உதவிடும் வாய்ப்பும் எனக்கும் திரு. உறுமத்தான் அவர்களுக்கும் கிடைத்ததை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. உறுமத்தான் அவர்களின் துணைவியார் திருமதி போதும்பொண்ணு உறுமத்தான் அவர்கள் தமராக்கி கண்டாங்கிபட்டி ஒன்றிய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டு கண்டாங்கிபட்டியில் அஞ்சல் அலுவலகம் அமையவும், தமராக்கி பகுதிக்கு தனி மின்சார டிரான்ஸ்பார்மர் நிறுவவும் காரணமாக இருந்தார். கூட்டுறவுப்பட்டி, மலம்பட்டியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி துவங்க மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் மூலம் ஏற்பாடு செய்தார். வங்கி மலம்பட்டியிலும், அதன் கவுண்டர் கூட்டுறவுபட்டியிலும் திறக்கப்பட்டது.

மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் இந்தியாவிலுள்ள அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளும் சிவகங்கை நகரில் அமைய முயற்சி செய்து அவற்றின் திறப்புவிழாக்களிலும் கலந்து கொண்டார். அந்நிகழ்ச்சிகளில் திரு. அ. உறுமத்தான் அவர்களும் திருமதி போதும்பொண்ணு உறுமத்தான் அவர்களும் மகளிர் குழுக்களோடு கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். இப்பகுதி முன்னேற்றத்திலும் அவர்கள் பெரும் பங்கு வகித்தனர். அவர்கள் பணி தொடர, தொண்டு சிறக்க வாழ்த்துகிறேன்.

மன்னர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான போராட்டத்தில் பங்காற்றியது; சிவகங்கை மன்னர் கார்த்திகேய வெங்கடாஜலபதி அவர்கள் இயற்கை எய்தியபோது அவரது நல்லடக்க காரியங்களில் பாப்பாதுரை, மாணிக்கம்பிள்ளை, பலசரக்கு கடை பாண்டி மற்றும் அரண்மனை உறவினர்களுடன் இணைந்து பணியாற்றியது; சிவகங்கை காந்திஜி பூங்கா டிரஸ்ட் சார்பில் பழைய கட்டிடங்களை இடித்து புதிய கடைகளை கட்ட திட்டமிட்டு ஒத்துழைப்பு செய்தது; கட்டடம் கட்ட வங்கிக்கடன் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்களில் திரு. மாணிக்கபிள்ளை மற்றும் E.M. சுதர்சன நாச்சியப்பன் அவர்கள் முயற்சியில் உடனிருந்து கடன் அனுமதி பெற துணை நின்றது முதலானவை எங்கள் இருவரின் அரசியல் பணியில் என்றும் நினைவில் நிற்கும்.

# திரு. உறுமத்தான் அவர்களின் சாதனைகள்

*சிவகங்கை மாவட்ட சர்வோதய மண்டல் தலைவராகிய திரு.அ.உறுமத்தான் அவர்கள், பல ஆண்டுகளாக சர்வோதயப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். சர்வோதயத் தலைவர் அமரர் ச.ஜெகந்நாதன், அவருடைய துணைவியார் திருமதி கிருஷ்ணம்மாள், பூமிதான வாரியத்தின் தலைவராக இருந்த அமரர் வித்தியானந்த சரஸ்வதி ஆகியவர்களுடன் அணுக்கமாக இருந்து சர்வோதயத் தொண்டில் ஈடுபட்டு தமிழ்நாடு முழுவதுக்கும் அறிமுகமான அன்பர்.*

*அண்மையில் 21.12.2017ஆம் தேதியன்று கல்கத்தாவில் நடைபெற்ற விழாவில் விவேகானந்தர் மற்றும் சகோதரி மார்கரெட் விருது இவருக்கு அளிக்கப்பட்டது. சமூக நலத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் கல்கத்தாவில் உள்ள சகோதரி மார்கரெட் நிறுவனத்தால் இந்த விருது திரு.உறுமத்தான் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த விழாவில் மேற்குவங்க ஆளுநரும், ராமகிருஷ்ண மடத்துத் தலைவரும் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.*

*1991ஆம் ஆண்டு கிராமதான நிர்மாண சங்கத்தை சிவகங்கை மாவட்டம் அவருடைய சொந்த கிராமமாகிய தமராக்கியில் ஆரம்பித்தார். அவருடைய பெரிய தந்தையார் திரு. பெரியகருப்பன் அம்பலம், தமராக்கி ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறை இருந்து திரு.உறுமத்தான் அவர்களை சர்வோதய இயக்கத்தில் ஈடுபட வைத்தார். காந்தியடிகளின் முக்கியக் கொள்கைகளான தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, கிராம தொழில் வளர்ச்சி, கதர், கிராமப்புறப் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாடு முதலியவற்றிற்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். மலிவு விலை மதுவிற்பனையை எதிர்த்து சென்னை திருவல்லிக்கேணி மதுக்கடை முன்பு மறியல் செய்து சிறை சென்றார்.*

*தமராக்கியில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக பதினேழு ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றினார். 1986 – 87இல் மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு நிறுவனம் என்பதற்கான கேடயம் தமிழ்நாடு அரசு சிறப்புப் பிரதிநிதி கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரால் இவருக்கு வழங்கப்பட்டது. மாநிலத்தில் சிறந்த கூட்டுறவு நிறுவனம் என்பதற்காக 1987 – 88ஆம் ஆண்டுக்கான விருதை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு.பழமலை அவர்களால் திரு.உறுமத்தான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஏறக்குறைய 1300 கீழக்கரிசல் ஆடுகள் புதுக்கோட்டை அரசுப் பண்ணைக்கு மாதிரி வளர்ப்புக்காக கொள்முதல் செய்யப்பட்டது.*

*மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கப்பார்ட்டின் நிதி உதவியில் 1995ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பால்பண்ணை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 250 குடும்பங்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள்.இயற்கை விவசாயத்தின் மூலம் காந்தி கிராம அறக்கட்டளைக்கு நெல் மற்றும் வெல்லம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மண் புழு உரம் விநியோகத்தில் 100 பேர் பயனடைந்திருக்கிறார்கள். கம்ப்ரஸ்ட் எர்த் பிளாக் மூலம் நாள் ஒன்றுக்கு 15 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது.*


SWAMI VIVEKANANDA & SISTER MARGARET AWARD-2017

No. :

This Certificate of Excellence
is Awarded to
Shri A. Urumathan
Gram Dhana Nirmana Sangam, Tamil Nadu
for his / her outstanding contribution
towards Community Service and Comprehensive
Social Development
Dated on 21st December 2017

Swaroop Bhattacharya
President

Ms. Debangee Ganguly
Treasurer

Award presented by Sister Margaret Foundation, Kolkata, West Bengal, India

மரம் வெட்டுதலைத் தடுத்து சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது. பூவந்தியில் உள்ள முதியோர் இல்லமான 'பூங்குடில்' இதனால் கட்டப்பட்டது. சணல் பை பயிற்சியில் 60 பேர் கலந்துகொண்டனர். நபார்ட் நிதியுதவியுடன் 25 உழவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சுயஉதவிக்குழுக்கள் 350 நடைபெற்று வருகின்றன. மத்திய அரசின் சமூக நலத்துறை அமைச்சகத்தின் நிதியுதவியில் ராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகங்கள் 7 நடைபெற்று வருகின்றன. இதனால் 175 பேர் பயனடைந்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை நிதியுதவியுடன் குடும்ப நல ஆலோசனை மையத்தில் 2000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன.

01.04.2009இல் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார வழங்கல் துறை அமைச்சகத்தின் நிதியுதவியுடன் குடிபோதை மாற்று சிகிச்சை மையத்தின் மூலம் 1800 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் டாக்டர் ஆர்.கதிர்மணி உட்பட மொத்தம் 12 பேர் பணி செய்து வருகிறார்கள். இலவச தங்கும் இடத்தில் மருத்துவ வசதி, யோகா, தியானம், கவுன்சிலிங் தினந்தோறும் நடைபெறுகின்றன.

திரு.உறுமத்தான் அவர்களுக்கு, சிறந்த ஆக்கப்பணி ஊழியர் என்ற முறையில் காந்தி கிராமத்தில், இத்தாலியைச் சேர்ந்த ஃப்ளாரன்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆல்பர்டோ அவர்களால் 2017ஆம் ஆண்டுக்கான விருது அளிக்கப்பட்டது. சென்னையில் உள்ள தேசிய ஒருமைப் பாட்டுக்கான பண்பாட்டு அகாடமியின் 2016ஆம் ஆண்டுக்கான நட்சத்திர சாதனையாளர் விருது திரு.உறுமத்தான் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு சினிமா கலைமன்றத்தின் சார்பில் 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த நீடித்த விவசாயி என்பதற்கான விருது பத்மஸ்ரீ டாக்டர் மனோரமா அவர்களால் உறுமத்தான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மதுரை மண்டல எல்.ஐ.சி. நிர்வாகியால் சிறந்த சமூக சேவகர் விருது 2013ஆம் ஆண்டுக்காக அளிக்கப்பட்டது. இவருடைய மருத்துவ சேவைக்காக புலிப்பாணி விருது வடலூரில் நடைபெற்ற 30ஆவது அகில இந்திய சித்த வைத்தியர்கள் மாநாட்டில் 22.01.2008 அன்று வழங்கப்பட்டது.

திரு.உறுமத்தானின் நிறுவனத்துக்கு அரசுத் துறைகளும், காந்தி கிராம அறக்கட்டளை மற்றும் கிராமிய பல்கலைக் கழகம், கன்னியாகுமரி விவேகானந்தர் கேந்திரம் ஆகிய இடங்களிலிருந்து ஒத்துழைப்புக் கிடைத்து வருகிறது.

**நன்றி : "சர்வோதயம் மலர்கிறது" மாத இதழ் – பிப்ரவரி 2018**



கன்னியாகுமரிக்கு வருகை தந்த வினோபாஜி அவர்களுடன் அ. உறுமத்தான் அவர்களின் குரு திரு. அரு.சதாசிவம் (வலது ஓரம்)



சர்வோதயத் தலைவர்கள் திரு.ச.ஜெகந்நாதன் மற்றும் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்



பூமிதான வாரியத் தலைவர்
சுவாமி வித்யானந்த சரஸ்வதி அவர்களுடன்...



ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வருகை புரிந்த அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.சிதம்பரம் அவர்களுடன்... (1984)

2017ஆம் ஆண்டுக்கான
‘‘சிறந்த ஆக்கப் பணி
ஊழியர்’’ விருது
இத்தாலி, ஃப்ளாரன்ஸ்
பல்கலைக்கழகப்
பேராசிரியர் ஆல்பர்டோ
அவர்களால்
காந்திகிராமத்தில்
நடைபெற்ற விழாவில்
அளிக்கப்பட்டது.






சென்னையில்
நடைபெற்ற விழாவில்
சிறந்த சமூக
சேவகருக்கான
விருதினைப் பெறும்
திரு. அ. உறுமத்தான்

கொல்கத்தாவில் நடைபெற்ற
நிவேதிதா அம்மையார் விருது
வழங்கும் விழாவில்,
மேற்குவங்க மாநில ஆளுநர்
முன்னிலையில் ராமகிருஷ்ண
மடத்தின் தலைமை சன்னியாசி
அவர்களிடமிருந்து விருது
பெறும் திரு.அ.உறுமத்தான்...





ஆயுள் காப்பீட்டுக் கழக கணினிமய அலுவலகத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அ.உறுமத்தான் அவர்கள் திருவிளக்கு ஏற்றுகிறார்...




மாவட்ட ஆட்சியர் திருமதி மலர்விழி அவர்கள் தலைமையில் சிவகங்கையில் நடைபெற்ற மது ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணியில்...



கண்டாங்கிபட்டியில் நடைபெற்ற குறைதீர்க்கும் நாள் நிகழ்வில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு.ராஜாராமன் அவர்களுடன் ஒன்றியக் கவுன்சிலர் திருமதி போதும்பொன்னு உறுமத்தான் அவர்கள்...